விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT BBA(Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
(C-3922)
021 7534 807

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 275 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 04 சனிக்கிழமை (20.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### திருகோணமலையில் பொலிஸாரால்

## தியாக தீபம் திலீபனின் உருவப்படம் அகற்றப்பட்டது



(திருகோணமலை)

திருகோணமலையில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இடம்பெற்றுவந்த நிலையில் திலீபனின் உருவப்படம் பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

### வேலணையில்

## ஒருங்கிணைப்புத் தலைவரை வழிமறித்துப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு அப்பிரதேச மக்கள் பிரதிநிதிகளாகிய

15ஆம் பக்கம் பார்க்க

## உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிலைநாட்டப்படும்

### பிரதமர் ஹரிணி உறுதி



(கொழும்பு)

உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிலை நாட்டப்படும். அரசாங்கம் இதில் பொறுப் புணர்வுடன் செயற்பட்டு வருகின்றது எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய

15ஆம் பக்கம் பார்க்க



## பேருந்திலிருந்து வீழ்ந்த இளைஞன் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகரில்

15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் விபத்து; ஜேர்மன் பிரஜை பலி

(வவுனியா)

வவுனியாவில் இடம்

15ஆம் பக்கம் பார்க்க

SYNERGY EDU FIESTA 2025
உங்கள் பட்டப்படிப்பை முடித்து விட்டீர்களா?
40 லட்சம் வரையிலான புலமை பரிசில்
100% இலவச சேவை


27 SEP 2025
9.30AM
VALAMPURI HOTEL JAFFNA
UK, CANADA, AUSTRALIA மற்றும் NEW ZEALANDல் கல்வியைத்தொடர ஓர் அரிய வாய்ப்பு!
அனைத்து மாணவர்களுக்கும் விமானப் பயணச்சீட்டு இலவசம்!
076 458 0968 / 021 222 2893
(C-281)
SYNERGY CONSULTANT

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35வது பிறந்தநாள் நினைவும் 11ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

## அமரர் தயாபரன் சிவதர்ஷன்

(உரிமையாளர் - சிவதயா பிறிண்டேர்ஸ்)

பிறப்பு : 27.09.1990 இறப்பு : 23.09.2014





திதி - சதுர்த்தசி 20.09.2025

மழலை மொழிபேசி மடி தவழ்ந்த சிவமகனே
நீ மறைந்து பதினொரு ஆண்டுகள் விரைந்தோடியதே
நம்பமுடியவில்லை நாவறண்டு போகுதையா
நீ வாழ்ந்த காலங்கள் காவியமாய் ஆனதையா

சதிசெய்து உன் வாழ்க்கை இடைவழியில் முடிந்தாலும்
விதியென்ற பெயர் சூட்டி சமரசங்கள் செய்தாலும்
பெற்றவரின் அடிவயிறு பற்றி எரியுதையா
நாம் உனைப்பிரிந்து நித்தம் தவிக்கின்றோம்.



எம்மைப் பெற்றெடுத்தோருக்கு நினைவலைகள்



திருநாவுக்கரசு நாகரட்ணம்



நாகரட்ணம் தனலக்சுமி



கதிரவேலு விஜயசிங்கம்



விஜயசிங்கம் நாகேஸ்வரி

V.தயாபரன் (மாநகர சபை உறுப்பினர்)
குடும்பத்தினர்
தயா அச்சகம்
077 396 5214

தயா வெளியீடு.
இல.92(150). நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(5464)

# வேலணை பிரதேச சபை

## சாட்டி சிந்தாந்திரை மாதா திருத்தலம் வருடாந்த திருவிழா - 2025

## பகிரங்க அறிவித்தல்

வருடாந்த திருவிழா 2025.09.18 ஆம் திகதி ஆரம்பமாகி 2025.09.27 அன்று நிறைவு பெறுவதனை முன்னிட்டு இக்காலப்பகுதியில் தற்காலிக வியாபார அனுமதியினைப் பெறுவதற்கு வேலணை பிரதேச சபையின் வேலணை உப அலுவலகத்தில் 22.09.2025 க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குளிர்பானக் கடைகள், தேனீர் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் நடாத்துபவர்கள் முறையான தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்று சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்ட பின்னரே தற்காலிக வியாபார அனுமதி வழங்கப்படும்.

ஆலயச் சூழலில் வளர்ப்பு நாய்கள், மாடுகள் மற்றும் கட்டாக்காலி விலங்குகள் பொது வழிகளில் கட்டி வைக்கப்படுதல் அல்லது அலைந்து திரியவிடுதல் என்பன முற்றாகத் தடை செய்யப் பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆலய வளாகத்தினுள் வியாபார நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்

ஆலய வளாகத்தில் வியாபார நடவடிக்கைக்குரிய இடங்களில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட தற்காலிக வியாபார உரிமம் வழங்கப்படும். வியாபார உரிமம் பெற்றவர்கள் மட்டும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியும்.


தற்காலிக வியாபார நடவடிக்கையின் போது சேகரிக்கப்படுகின்ற பிளாஸ்ரிக் / பொலித்தீன் கழிவுகளை மற்றும் இதர கழிவுகளை தாங்களே சேகரித்து பிரதேச சபையிடம் முறையாக கையளித்தல் வேண்டும்.

தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.

தொடர்புகளுக்கு :
021 221 1505

(C-3920)

# மரண அறிவித்தல்



மலர்வு 12.08.1948

உதிர்வு 18.09.2025

## செல்லையா சிவபாலன்

### (ஓய்வு நிலை ஊழியர் SUN RICE வியாபார நிலையம், சாவகச்சேரி)

அல்வாய் தெற்கு ஓடையைப் பிறப்பிடமாகவும் 403, கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லைய்யா சிவபாலன் அவர்கள் கடந்த 18.09.2025 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லைய்யா - சின்னம்மா தம்பதியரின் இரண்டாவது மகனும் முகமாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற குலசிங்கம் - அன்னலட்சுமி தம்பதியரின் மூத்த மருமகனும் சுலோசனா அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சந்திரன், புவனேஸ்வரி, பூமா, உமா மற்றும் சந்திரபோஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகரூபன் (பிரான்ஸ்), சிவகௌரி (பிரான்ஸ்), ராகவன் (பிரான்ஸ்), றொசாந்தன் (பிரான்ஸ்), கெங்கா (ஆசிரியர் - வித்தியானந்த கல்லூரி - முல்லைத்தீவு), பிர்ந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைமகள் (பிரான்ஸ்), மயூரன் (பிரான்ஸ்), டயானா (பிரான்ஸ்), சுகேந்தினி (ஆசிரியை - வித்தியானந்த கல்லூரி - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் கெவின், நிவேக், அபிரா, ஹர்யித், டெலுக்சன், வர்சன், அனா, ஆரி, அகில் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ் சென்றவர்களான சுந்தரலிங்கம், பேரின்பநாதன் மற்றும் தயாளபூபதி, தேவராசா, விஜயகுமாரி, யோகராணி, சொர்ணலிங்கம், நடேசஈஸ்வரி, கிருபாஸ்கரன், அன்னகிருபா, குலகேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 403, கண்டி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்
மகன் : 077 606 3201, 077 428 3129

(C-3919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலைதீவு மற்றும் எழுவைதீவுக்கு இலவச படகுச்சேவை வேண்டும்

## அனலைதீவு விவசாய சங்கத் தலைவர் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**அனலைதீவு மற்றும் எழுவைதீவுக்கு இலவச படகுச்சேவையை வழங்க வேண்டும் என அனலைதீவுவிவசாயச் சங்கத் தலைவர் ரமேஸ்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.**

போக்குவரத்து தொடர்பான ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு மக்கள் குறை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவக போக்குவரத்து என்பது மிகவும் கடுமையான ஒன்றாக காணப்படுகின்றது. போக்குவரத்திற்காகவே மக்கள் பெரும் தொகைப்பணத்தையும் நீண்ட நேரத்தையும் செலவிடுகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நயினாதீவு, நெடுந்தீவு என்பவற்றிற்கு இலவச படகுசேவையை மேற் கொண்டிருக்கும் நிலையில் மிகவும் கஷ்டப்பட்ட பிரதேசமான அனலைதீவு, எழுவை தீவுகளுக்கு இலவசபடகு சேவையை மேற்கொள்ளாதது ஏன் எனக் கேள்வி எழுப்பினார்.

இவ்விடயத்தை ஆமோதித்த பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அனலை தீவு மற்றும் எழுவைதீவுக்கு செல்லும் ஆசிரியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

குறிகட்டுவானிலிருந்து படகில் சென்று இறங்கிய அவர்கள் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது.

எனவே அவர்களுக்குரிய போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். (நி-க)

## சிறுவர் தின நடிப்பு போட்டி

(யாழ்ப்பாணம்)

சிறுவர் தினத்தை முன்னிட்டு செயல்திறன் அரங்க இயக்கத்தால் சிறுவர் தின நடிப்பு போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்வதற்கான வயதெல்லை 9 வயது தொடக்கம் 16 வயது வரையாகும். அத்துடன் போட்டியாளர்கள் தாம் விரும்பிய கருப்பொருளில் 12-15 நிமிடங்கள் வரை நடிக்கலாம்.

நல்லூரில் அமைந்துள்ள முற்றம் வளாகத்தில் நடைபெறும் இறுதிப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு 1 ஆவது பரிசு 10,000 ரூபாவும் 2 ஆவது பரிசு 6,000 ரூபாவும் 3 ஆவது பரிசு 4,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் https://forms.gle/mYyhthec8F4k 6im68 எனும் கூகிள் படிவம் ஊடாக விண்ணப்பிக்க முடியும். மேலதிக தொடர்புகளுக்கு 077 311 2692 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

# போலித்தாள்கள் புழக்கத்தில் எச்சரிக்கை விடுக்கும் பொலிஸார்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் போலி 5000 ரூபா நாணயத்தாள்கள் புழக்கத்தில் இருப்பதாக பொலிஸார் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, ஹபரணை பகுதியில் மூன்று போலி 5000 ரூபா நாணயத்தாள்களுடன் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், ஹபரணை மற்றும் அநுராதபுரம் பகுதிகளில் 02 போலி 5000 ரூபா நாணயத் தாள்களுடன் மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மேலும் விசாரணையின் போது, பிஹிம்பியகொல்லேவ பகுதியில் நேற்று 138 போலி 5000 ரூபா நாணயத்தாள்களுடன் மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு மடிக்கணினி, ஒரு ஸ்கேனர் மற்றும் ஒரு அச்சுப்பொறியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 23 முதல் 42 வயதுக்குட்பட்ட ஹபரணை மற்றும் அநுராதபுரம் பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹபரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

மேலும் தினசரி பரிவர்த்தனைகளில் பயன்படுத்தப்படும் நாணயத்தாள்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி)

# வல்லிபுர ஆழ்வாருக்கு நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)



யாழ்.வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள் ளது.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வேட்டைத்திரு விழாவும் 4 ஆம் திகதி சனிக் கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திரு விழாவும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 6 ஆம் திகதி திங்கட் கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், மறுநாள் 7 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை கேணித்தீர்த்தத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)

# சஷீந்திர ராஜபக்ஷவுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால்கைது செய்யப்பட்டு தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை நாளை மறுதினம் வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரிக்கும் கொழும்பு தலைமை நீதவான் அசங்க எஸ்.போதரகம விடுமுறையில் உள்ளதால், வழக்கு அடுத்த திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

பொது சொத்துச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்ததாக சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி)

# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(ஹற்றன்)

சீரற்ற வானிலையால் இலங்கையின் 5 மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் தகவலின்படி, கொழும்பு, களுத்துறை, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, பொது மக்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# செட்டிக்குளத்தில் மீன்குஞ்சு வளர்ப்புத் தடாகம் பிரதி அமைச்சரால் கையளிப்பு



(வவுனியா)

வவுனியா, செட்டிக்குளத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மீன் குஞ்சு வளர்ப்புத் தடாகம் கப்பாச்சி மீனவ சங்கத்திடம் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவினால் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டது.

நன்னீர் மீன் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் 2025 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக நன்னீர் மீன் வளர்ப்பு தடாகங்களை உருவாக்கி மீன் குஞ்சுகளை விடுவதற்கு வவுனியா, செட்டிகுளம், முகத்தான் குளம், கப்பாச்சி மீனவ சங்கத்திற்கு 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருந்தது.

குறித்த நிதியில் அமைக்கப்பட்ட மீன் வளர்ப்பு தடாகம் மீனவ சங்கத்தினரிடம் கையளிக்கப்பட்டதுடன், 2 இலட்சம் மீன் குடம்பிகளை மீன் விரலிகளாக மாற்றி குளத்தில் விடும் வேலைத்திட்டமும் இதன் போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், செட்டிகுளம் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தவமலர் மனோகரராஜா, மீனவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதங்களின் சமர் கிரிக்கெட் தொடர்

**ஆண்கள் அணி- கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி சம்பியன்**
**பெண்கள் அணி - பூநகரி மத்திய கல்லூரி சம்பியன்**

**கிளிநொச்சி மாவட்டத்தின் வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் கல்வியை வழங்குகின்ற பூநகரி மத்திய கல்லூரி மற்றும் முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி அணிகள் மோதுகின்ற மருதங்களின் சமர் மென்பந்து துடுப்பாட்ட தொடரில் ஆண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி அணியும் பெண்களுக்கான போட்டியில் பூநகரி மத்திய கல்லூரி அணியினரும் வெற்றி பெற்றனர்.**







மருதங்களின் சமர் என்று அழைக்கப்படுகின்ற பூநகரி மத்திய கல்லூரி அணிக்கும் முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி அணிகளுக்குமிடையிலான துடுப்பாட்ட போட்டி பூநகரி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட 10 பந்து பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து தொடரில் இரு கல்லூரிகளின் பெண்களுக்கான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய முருகானந்தா கல்லூரி அணி 10 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 75 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பூநகரி மத்திய கல்லூரி அணி 6பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 76 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து 8 இலக்குகளினால் வெற்றி பெற்றனர்.

அத்துடன் ஆண்களுக்கான 20 பந்து பரிமாற்றங்கள் கொண்ட தொடர் இரண்டாவது தொடராக இந்த வருடம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பூநகரி மத்திய கல்லூரி அணி 18.01பந்து பரிமாற்றத்தை எதிர்கொண்டு 108 ஓட்டங்களை பெற்ற நிலையில் அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முருகானந்தா கல்லூரி அணி 11.01 பந்து பரிமாற்றத்தில் 110 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து 5 இலக்குகளினால் வெற்றி பெற்றனர். இதன் மூலம் மருதங்களின் சமர் துடுப்பாட்டம் 1:1 என்ற கணக்கில் முடிவடைந்தது.(3-316)



வவுனியா மாவட்ட வலுதூக்கல் சங்கத்தினால் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட பளுதூக்கும் போட்டி சங்க தலைவி தனலட்சுமி முத்துக்குமாரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இப் போட்டியில் விருந்தினர்களாக உதவி நகர மேஜர் கார்த்தீபன் மற்றும் வவுனியா காவல்துறைப் பொறுப்பதிகாரி பிரதீப் சுரங்க வீரட்டன் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



கனடாவில் நடைபெறும் 6 ஆவது உலகத்திருக்குறள் மாநாட்டில் சிறப்புரையாற்றுவதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் கனடா சென்றார்.விமான நிலையத்தில் விழாக்குழுவினர் அவரை வரவேற்ற போது.....

### ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்

# ஆப்கானிஸ்தானை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி



2025 ஆசியக் கிண்ணப் போட்டியில் ரி 20 போட்டியின் பி குழுவில் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 169 ஓட்டங்கள் எடுத்தது.

ஆப்கானிஸ்தான் அணி சார்பில் ரஹ்மானுல்லா குர்பாஸ் 14 ஓட்டங்கள், செடிகுல்லா அடல் 18 ஓட்டங்கள், இப்ராஹிம் ஜத்ரான் 24 ஓட்டங்கள், கரீம் ஜனத் ஒரு ஓட்டம், டார்விஷ் ரசூலி 9 ஓட்டங்கள், அஸ்மதுல்லா உமர்சாய் 6 ஓட்டங்கள், ஆப்கானிஸ்தான் அணிக்காக கப்டன் ரஷித் கான் 24 ஓட்டங்கள் எடுத்தனர்.

பந்துவீச்சில், இலங்கை அணிக்காக சிறப்பாக பந்துவீசிய நுவான் துஷாரா 4 விக்கெட்டுகளையும், துஷ்மந்த சமீர, துனித் வெல்லாலகே மற்றும் தாசுன் ஷனகா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட் இழந்து 171 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.இலங்கை அணி துடுப்பாட்டத்தில் குசல் மெண்டிஸ் 74 ஓட்டங்கள், அதேநேரத்தில் போட்டி முழுவதும் மிகவும் வெற்றிகரமான இன்னிங்ஸை விளையாடிய போதும் நிஸ்ஸங்க இந்த போட்டியில் 6 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். குசால் பெரேரா 28 ஓட்டங்கள் எடுத்தார். கமில் மிஷாரா 4 ஓட்டங்களையும் கெப்டன் சரித் அசலங்கா 17 ஓட்டங்களையும், கமிந்து மெண்டிஸ் 26 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

அதன்படி, ஆப்கானிஸ்தான் அணி மற்றும் இலங்கை அணி இடையிலான போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.(3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை

# 125 ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலர்

### செஞ்சொற் செல்வரின் ஆசிரியுரை



யாழ்ப்பாணம் வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாசாலையின் 125 ஆவது ஆண்டு விழா குறித்து வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் ஆனந்த மடைகின்றேன். சைவமும் தமிழும் செழிக்க ஸ்ரீமான் அருணாசல சாஸ்திரிகள் 1900 ஆம் ஆண்டு ஸ்தாபித்த இப்பாடசாலை பல அறிஞர்களை உருவாக்கிய பெருமைக் குரியது. இப்பாடசாலை அன்று ஆரம்பித்த பெருமகனாரின் உயர்ந்த நோக்கம் என்றும் போற்றுதலுக்குரியது. நாவலர்பெருமானின் வழியில் இப் பெரியார் தொடக்கிய கல்விப்பணி மறக்க முடியாதது.

பழமைமிக்க இப்பாடசாலை சூரிய சந்திரன் உள்ளவரை நிலைபெற துர்க்கை அம்மனை வேண்டி, நல்லாசி கூறி அமைகின்றேன்.

**செஞ்சொற்செல்வர்.கலாநிதி.ஆறு.திருமுருகன்.**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை**

### வாழ்த்துச் செய்தி



வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாம வலய ஆளுகைக்குள் காணப்படும் சிறந்த கல்விப் பாரம்பரியத்தினையும், சமய பண்பாட்டு கலாசாரத்தினையும் பேணுகின்ற தனித்துவமான பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்ற யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவில் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மனித வாழ்வின் விழுமியங்களை ஒழுங்குபடுத்துவது கல்வி எனும் பெருஞ்செல்வமாகும். இக்கல்வியை குழந்தைப்பருவத்தில் கற்க வேண்டும் என்பதனை மனதிற்கொண்டு 1900 ஆண்டில் ஆரம்ப பருவ பிள்ளைகளுக்கான கல்விப்பணியுடன் ஆரம்பிக்கப் பட்டு கல்விச் செயற்பாடுகளில் படிப்படியாக வளர்ச்சி பெற்று சண்டிலிப்பாய் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக 125 ஆண்டுகள் தன்னிகரில்லாச் சேவையாற்றி கல்விப்பாரம்பரியத்தினையும், ஒழுக்கவிழுமியங்களையும் பேணுகின்ற தனித்துவமான பாடசாலையாக யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை இன்றும் மிளிர்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பக் கல்வியில் பெறப்படும் மனப்பாங்குகளும் பழக்கவழக்கங்களும் ஆழமாகப் பதிகின்றன. இப்பருவத்திலேயே ஆராயும் ஊக்கமும், ஆக்கமும் வினைத்திறனுடையதாகும்.

இவ்வகையில் ஆரம்பக் கல்வியினை செவ்வனே வழங்கும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகள் அனைவரையும் பாராட்டுவதுடன், காலத்தின் தேவையறிந்து அறிவும், ஒழுக்கமும், நற்பண்புகளும், ஆளுமை விருத்தியும் கொண்ட நல்லதொரு இளைய தலைமுறையினை உருவாக்குவதில் தொடர்ந்தும் இப்பாடசாலை ஊக்கமுடன் செயற்பட வேண்டுமெனவும், நூல் வெளியீட்டு நிகழ்வுகள் சிறப்புற வேண்டுமெனவும் இறையாசியை வேண்டி மனதார வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.ம.பற்றிக் டிறஞ்சன், செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி



யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு வெளிவரும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இப் பாடசாலை சில தசாப்தங்களாக வலிகாமம் கல்வி வலயத்தில் மிகவும் புகழ் பெற்றதொரு பாடசாலையாக சிறந்து விளங்கி வருகின்றது.

இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களை நல்ல பெறுபேற்றினை பெற்றுக்கொள்ளவதற்கான திடசங்கற்பத்துடன் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் ஒருங்கிணைந்து செயற்பட்டதன் விளைவாக ஒவ்வொரு வருடமும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் குறிப்பிட்ட சதவீதமான மாணவர்கள் சித்தி பெறுகின்றமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இனிவரும் காலங்களில் இச்சாதனைகள் தொடரவும் சிறப்பாக கல்விப் பணியினை மாணவர்களுக்கு வழங்கவும் கல்வியில் மட்டுமன்றி இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் இப் பாடசாலை பல சாதனைகளைப் பெற்றுக்கொள்ளவும் வாழ்த்துகின்றேன். இச் சாதனைகளுக்கு உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்கள்.

**திரு.யோ. ஜெயச்சந்திரன் மாகாணக் கல்விப்பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித்திணைக்களம்,வடக்கு மாகாணம்.**





### யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை

**ஸ்தாபிதம் - 1900 ஆம் ஆண்டு**
**ஸ்தாபித்தவர் - ஸ்ரீலஸ்ரீ அருணாசல சாஸ்திரிகள்**
**சிறப்புப் பெயர் - "ஐயற்ற பள்ளிக்கூடம்"**
**அமைவிடம் - வடலியடைப்புக் கிராமத்தில் புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் அருகில்**

- ❖ ஆரம்பத்தில் திண்ணைப் பள்ளி
- ❖ 1920 இல் அரசின் கல்வி மாற்றத்திற்கு ஏற்ப முறைமை மாற்றப்பட்டது (தரம் 1 முதல் - JSC வரை)
- ❖ 1933 இல் ஸ்தாபகரால் 19 பரப்பு காணியில் கட்டடம் அமைத்து சைவவித்தியா விருத்திச் சங்கத்திற்கு நன்கொடை வழங்கப்பட்டது.
- ❖ 1961 இல் அரச உதவி பெறும் பாடசாலை என்ற ரீதியில் தேசிய மயமானது.
- ❖ 1972இல் தரம் 1 முதல் 5 வரையான ஆரம்ப பாடசாலையாக இயங்க ஆரம்பித்தது
- ❖ 1992 முதல் இடம்பெயர்புகள் பற்பல இடங்களில் இயங்கி 1996 இல் மீண்டும் பழைய இடத்தில்.
- ❖ தற்போது வருடம் தோறும் 5 முதல் 10 வரையான மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறுகின்றனர்.

### வாழ்த்துச் செய்தி



யாழ் மாவட்டத்தின் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் அமையப் பெற்ற யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை தனது வளர்ச்சிப்பாதையில் 125ஆவது ஆண்டினை நிறைவு செய்வதனையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1900 ஆம் ஆண்டு ஸ்ரீ அருணாசல சாஸ்திரிகளால் ஸ்தாபிக்கப்பட்ட இப்பாடசாலையானது, நம் சமூகத்துக்கு கல்வி வெளிச்சத்தைப் பரப்பி, உன்னத பண்பாட்டு அறநெறியுடன் தனது சிறப்புமிக்க இந்த வரலாற்றுச் சாதனையை எட்டுவதில் அர்ப்பணிப்புடன் இங்கு பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றேன். யாழ் மாவட்டம் எதிர்நோக்கிய கடந்த கால போர் அனர்த்தங்களின் போதான இடப்பெயர்வுகள், பொருளாதார நெருக்கடிகள், கல்விச் செயற்பாடுகளுக்கான இடையூறுகள் போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து அதனூடாக மீண்டெழுந்து இப்பாடசாலைச் சமூகம், புதிய உத்வேகத்துடன் காலடி எடுத்து வைத்து இவ்விழாவினைச் சிறப்பாக கொண்டாடுவது அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை இன்றைய தொழில்நுட்ப உலகிற்கு ஏற்ற வகையில், எதிர்காலத்தில் தனது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு 125 ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெறவும் 125 ஆவது ஆண்டு மலர் ஆக்கபூர்வமான பல செய்திகளைத் தாங்கி சிறப்பாக வெளிவரவும், எனது நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. நாகலிங்கம் வேதநாயகன்**
**ஆளுநர்,வடக்கு மாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிதென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பண்டத்தரிப்பு கிராமத்தில் ஆரம்பக் கல்வியை மாணவர்களிற்கு ஊட்டும் கல்வித்தாயாக மிளிரும் யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை தனது நூற்று இருபத்தைந்தாவது ஆண்டு விழாவை கொண்டாடும் இத்தருணத்தில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நல்ல பிரஜைகளை உருவாக்குவதில் பாடசாலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. அந்தவகையில் 1900 ஆம் ஆண்டு ஸ்ரீ அருணாசல சாஸ்திரிகள் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை யானது நூற்றாண்டைக் கடந்து வீறுநடை போடுவது பாடசாலைக்கு மட்டுமல்லாது எமது மாவட்டத்திற்கே பெருமை தரும் விடயமாகும். "மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுடன் சமய சமூக ஆன்மீகச் செயற்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபாடு காட்டச் செய்யும் இவ்வித்தியாசாலை நாட்டிற்கு நற்பிரஜைகளையும் அறிவுசார் பெரியோர்களையும் எதிர்காலத்தில் உருவாக்கி நூற்றாண்டைக் கடந்து சிகரமாய் உயர்ந்து நிற்க எனது வாழ்த்துக்களைத் தெரிவத்துக்கொள்கின்றேன்.

மேலும் நூற்று இருபத்தைந்தாவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் இம்மலரானது எதிர்கால சந்ததியினருக்கான ஒரு ஆவணப் பொக்கிசமாக அமையும் என்பதை மனதிற் கொண்டு இம்மலர் வெளியீடானது சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.ம.பிரதீபன், மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்**

### வாழ்த்துச் செய்தி



வடலியடைப்பு சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை தன் கல்விச் சேவையின் 125 ஆவது வரலாற்றுச் சிறப்புமிக்க பயணக் கட்டத்தை எட்டியுள்ளதை அறிந்து மனமார்ந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வி என்பது தனி மனிதரின் முன்னேற்றத்திற்கும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் அடிப்படைக் கல்லாகும். இப்பாடசாலை கடந்த நூற்றாண்டுக்கும் மேலாக அயராது கல்விச் சேவையாற்றி, பல தலைமுறை மாணவர்களை அறிவு, ஒழுக்கம், பண்பாட்டுத் தழுவிய நற்குடிமக்களாக உருவாக்கியுள்ளது. குறிப்பாக புலமைப்பரிசில் பரீட்சைகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈட்டிய சிறப்பான சாதனைகள், இப்பாடசாலையின் கல்வித் தரத்தையும் ஆசிரியர்களின் அக்கறையையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வெற்றிகள், மாணவர்களுக்கு ஊக்கமாகவும், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கு பெருமையாகவும் அமைகின்றன.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக பாடுபட்ட முன்னோடி கல்வியாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் தியாகச் சேவைகள் போற்றத்தக்கவை. அவர்களின் அர்ப்பணிப்பினால் தான் இன்று இப்பள்ளி 125 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பெருமையினை அடைந்துள்ளது.

இந்த விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலர், பாடசாலையின் வரலாறு, கல்விச் சாதனைகள், எதிர்கால நோக்கங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தி, மாணவர்களையும் கல்வி சமூகத்தையும் மேலும் ஊக்குவிக்கும் என்ற நம்பிக்கையுடன், பாடசாலையின் எதிர்கால முன்னேற்றத்திற்கு மனமார்ந்த வாழ்துகளைத் தெரிவிக்கிறேன்.

**திருமதி.யமுனா இராஜசீலன்**
**வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர்.**

### வாழ்த்துச் செய்தி



பெரும் மரம் ஒன்று சிறு முளைத்தளிரால் தொடங்கியது போல, எமது சைவப்பிரகாச வித்தியாசாலை 125 ஆண்டுகளுக்கு முன் சிறிய துவக்கத்துடன் கல்வியின் விதையை நட்டு, இன்று பரந்த கிளைகளைக் கொண்ட அறிவுக் கோபுரமாக வளர்ந்துள்ளது.

2017 ஆம் ஆண்டிலிருந்து இப்பாடசாலையின் அதிபராய் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது எனது வாழ்நாள் பெருமையாகும். "கல்வியே உயிரின் உச்ச அழகு, அறிவே வாழ்வின் அகமகிழ்ச்சி" என்ற உண்மையை முன்னிறுத்தி, எமது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் என அனைவரின் அன்பும் அர்ப்பணிப்பும் ஒன்றுசேர்ந்து, பள்ளி அபிவிருத்தியின் பல்வேறு தளங்களில் பசுமைத் துளிர் பூத்துக் கொண்டிருக்கின்றன. பாடசாலையின் கட்டமைப்பு அழகு புதிய தோற்றம் பெற்றது; பாடப்பிரிவு விரிவு புதிய ஒளி பெற்று விரிந்தது; தகவல் தொழில்நுட்ப வசதிகள் மாணவர்களின் கைகளில் உலகத்தை கொண்டு வந்தது; விளையாட்டுத் துறையில் புதிய வீர ஆற்றல்கள் பிறந்தன; பசுமைச் சூழலில் அறிவுக் கனிகள் வளமான புலத்தில் மலர்ந்தன. எல்லாவற்றையும் விட பெருமை தருவது, எமது மாணவர்களின் கல்விச் சாதனைகள். புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்குக்கு மேல் பெற்றவர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே இருப்பது, எமது பாடசாலையின் கல்வித் தரத்திற்கான சான்றாகவும், இளைஞர்களின் உழைப்புக்கும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பிற்கும், பெற்றோர்களின் ஊக்கத்திற்கும் அழியாப் பதக்கமாகவும் திகழ்கிறது.

இந்த 125 ஆண்டுகள் நிறைவு விழா என்பது வெறும் கணக்கல்ல; அது நினைவுகளின் பொற்காப்பகம், சாதனைகளின் பெருமைக் கோயில், எதிர்காலத்தின் ஒளிக்கோபுரம் ஆகும். இன்று நாம் கொண்டாடுவது கடந்த காலத்தின் புகழையும், நாளைய கல்விப் பாதையில் விதைக்கப்படும் நம்பிக்கையையும் சேர்த்த ஒரே தருணமாகும். இந்த அற்புதமான பயணத்தில் பங்காற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நற்பிரியர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது பாடசாலை இனியும் கல்வி, ஒழுக்கம், பண்பு, பண்பாடு ஆகிய அனைத்திலும் பிரகாசிக்கட்டும் என்பதே என் பிரார்த்தனை.

வாழ்க எங்கள் சைவப்பிரகாசம்! வளர்க எங்கள் மாணவர்களின் சாதனைகள்!
பெருகுக எங்கள் பாடசாலையின் புகழ்!

**திரு.ப.பிரதாபன் - அதிபர்,**
**யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை.**

### வாழ்த்துச் செய்தி



125 ஆண்டுகள் என்பது ஒரு கல்வி நிறுவனத்திற்கு சாதாரணமான காலப் பயணம் அல்ல. நூற்றாண்டுக்கும் மேலாகத் தடைகளைத் தாண்டியும் சவால்களை வென்றும், கல்வியின் ஒளியை ஊர்வாசிகளுக்குப் பரப்பி, பல தலைமுறைகளை அறிவால் செம்மைப் படுத்தி, பண்பாலும் ஒழுக்கத்தாலும் உயர்த்தி வந்த வரலாறு உண்மையிலேயே சிறப்பிக்கத்தக்கது.

கல்வியின் உயர்ந்த நோக்கம் அறிவை மட்டுமே வழங்குவது அல்ல; நல்லுணர்ச்சி மிக்க குடிமக்களையும், எதிர்கால தலைவர்களையும் உருவாக்குவதே ஆகும். அந்தக் குறிக்கோளை அடைவதில் இப்பள்ளி தனது பங்களிப்பை சிறப்பாகச் செய்துள்ளது.

குறிப்பாக, புலமைப்பரிசில் பரீட்சைகளில் மாணவர்கள் பெற்று வரும் சாதனைகள், இப்பள்ளியின் கல்வித் தரத்தையும், ஆசிரியர்கள் காட்டும் அர்ப்பணிப்பையும், மாணவர்களின் உழைப்பையும் வெளிப்படுத்துகின்றன. இவை அனைத்தும் சமூகத்தில் இப்பள்ளிக்கான நம்பிக்கையை உயர்த்தியுள்ளன. 125 ஆவது ஆண்டு மலர் வெளியீடு, பள்ளியின் சிறப்பான வரலாற்றையும், கல்வி வளர்ச்சிப் பயணத்தையும், எதிர்கால இலட்சியங்களையும் வெளிப்படுத்தும் வரலாற்றுப் பக்கமாக அமையும். இது மாணவர்களுக்கு ஒரு ஊக்கமாகவும், கல்விச் சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாகவும் இருக்கும்.

இந்த மகத்தான சாதனையை முன்னிட்டு, வடலியடைப்பு சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை கல்வி வெளிச்சத்தை மேலும் பரப்பி, மாணவர்களின் திறமைகளை விருத்தி செய்து, சமூக முன்னேற்றத்திற்கு தொடர்ந்து பங்களிக்க வேண்டும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன், என் இதயப்பூர்வமான வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நோபேட் உதயகுமார்**
**[illegible] கல்விப் பணிப்பாளர்.**

(5462)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சைக் கூடத்தின் செயற்பாடுகள் ஆரம்பம்

(வவுனியா)

**வவுனியா பொது வைத்தியசாலையில் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த இருதய சத்திர சிகிச்சை கூடம் நேற்று முன்தினம் தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.**

நெதர்லாந்து அரசின் நிதி உதவியோடு இருதய சத்திர சிகிச்சை கூடம் அதற்கான உபகரணங்களோடு அமைக்கப்பட்டபோதிலும் பயன்பாடின்றி காணப்பட்டது.

இந் நிலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த இரு வருடங்களுக்கு முன் திறந்து வைக்கப்பட்ட நிலையிலும் வைத்திய நிபுணர்கள் இன்மையால் குறித்த சத்திர சிகிச்சை கூடம் செயற்படாமல் இருந்தது.

இதன் காரணமாக வவுனியா மற்றும் அதனை அண்டிய பகுதி மக்கள் யாழ். ஆதார வைத்தியசாலை மற்றும் வேறு மாவட்டத்திற்கும் செல்ல வேண்டிய நிலைமை காணப்பட்டிருந்தது.

இந்நிலையில் அண்மையில் சுகாதார அமைச்சினால் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் தி. வைகுந்தன் நியமிக்கப்பட்டதன் பின்னர் குறித்த சத்திர சிகிச்சை கூடத்தினை ஆரம்பிப்பதற்கான முழுமையான பணியில் ஈடுபட்டிருந்தார். இதன் பிரகாரம் ஆளணி பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் யாழ்.மாவட்டத்தின் சிரேஸ்ட முன்னணி இருதய சத்திர சிகிச்சை நிபுணர் பி.லக்ஸ்மன், வவுனியா இருதய சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். ஆர். குமார மற்றும் ஏனைய வைத்தியர்கள், வைத்தியசாலை நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் குறித்த இருதய சத்திர சிகிச்சை கூடத்தில் பணிகள்.ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையில் சுமார் எட்டு வைத்தியசாலைகளிலேயே இருதய சத்திர சிகிச்சை பிரிவுகள் உள்ள நிலையில் வவுனியாவிலும் தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளமை பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-250)

# தியாகதீபம் திலீபனின் 5 ஆம் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 5ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33)

# பேருந்தில் பணம் கொள்ளை

(சாவகச்சேரி)

பளைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி தனியார் பேருந்தில் பயணித்த பெண் ஒருவருடைய கைப் பையில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை பணம் மற்றும் நகை ஆகியன திருடப்பட்டிருப்பதாக கொடிகாமப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது கைப் பையில் இருந்து 65ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் தங்கச் சங்கிலி ஆகியன திருடப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

துணுக்காய் பகுதியில் இருந்து யாழ் நோக்கிச் சென்ற பேருந்திலேயே மேற்படி கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றிருந்த நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8-30)



புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கலையினை வளர்த்தெடுக்கும் பணியினை முன்னெடுத்து வரும் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் வெள்ளிவிழாவும் மதிப்பளிப்பு நிகழ்வும் கடந்த 14.09.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று சுவிசர்லாந்தின் பேர்ண் மாநகரின் புறூக்டோப் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உயர்பட்ட படிப்புகளின் பீடாதிபதி முதுநிலைப் பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகமுதுநிலை வாழ்நாள் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ் அவர்களும் ஓய்வுநிலை ஆய்வுப்பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

# உள்ளூர் கலப்பின வெண்டி அறிமுக வயல் விழா



(யாழ்ப்பாணம்)

உள்ளூர் கலப்பின வெண்டி அறிமுக வயல்விழா நிகழ்வு அண்மையில் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்தில் வை.ஞானபாஸ்கரன், பண்ணை முகாமையாளர் தலைமையில் நடைபெற்றது.

550m² விஸ்தீரணத்தில் உள்ளூர் கலப்பின புதிய வெண்டி வர்க்கமான GK Ok Hybrid– 2 இற்கான அறிமுக வயல்விழா நடைபெற்றது. இவ் வெண்டி இனமானது கிராந்துருக்கோட்டை விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. OK 45 என்ற பெண் தாய் தாவரம் மற்றும் OK 11 என்ற ஆண் தாய்த்தாவரங்களின் மூலம் GK Ok Hybrid – 2 என்ற இனம் பெறப்பட்டது. முளைதிறன் 85% ஆகவும், விதையானது சாம்பல், பச்சை நிறத்தையும், காய் இளம்பச்சை நிறத்தையும் கொண்டிருந்தது. 23.05.2025 நடுகை செய்யப்பட்டு 40ஆம் நாள் பூத்தது. 47ஆம் நாளில் முதலாவது அறுவடை பெறப்பட்டது. தொடர்ந்து இதுவரை 10 அறுவடையில் 250 Kg வெண்டிக்காய்கள் பெறப்பட்டது. இதில் இருந்து 30mt/ha என்ற விளைச்சல் பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பயிர் நடுகை செய்யப்பட்டு இரண்டாம் வாரத்திலும், பூக்கும் காலத்திலும் களை கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் பசளைப் பிரயோகமும், அசேதனப் பசளையும் பயன்படுத்தப்பட்டது. மேலும் நோய் பீடைக்கட்டுப்பாடாக ஒரு கிழமை இடைவெளியில் இயற்கைப் பூச்சிநாசினியாக 3G Solution, ஐந்திலைக் கரைசல் என்பன பயன்படுத்தப்பட்டன. ஒப்பீட்டளவில் ஏனைய கலப்பின வெண்டியிலும் பார்க்க சித்திர வடிவ வைரசின் தாக்கம் மிகக் குறைவாகவே காணப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் உள்ளூர் கலப்பின வெண்டி இனமான GK Ok Hybrid-2 எமது பிரதேசத்திற்கு உகந்ததாகவும் சித்திர வடிவ வைரசின் தாக்கம் குறைவாகவும் உள்ளதன் காரணமாக இவ் அறிமுக வயல்விழாவில் கலந்து கொண்ட விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் இவ் உள்ளூர் கலப்பின வெண்டியை பயிரிடுவதற்கு முன்வந்துள்ளனர். (8)

# உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு யாழ் பொதுசன நூலகத்தினால் நடத்தப்படும் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு யாழ் பொதுசன நூலகத்தில் பல்வேறு நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

அந்த வகையில் ஆவணப் பகுதியில் இன்று மற்றும் நாளை முற்பகல் 10.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தொல்பொருள் கண்காட்சியும் ஆவணப்படுத்தல் தொடர்பான விளக்கமளித்தலும் இடம்பெறும்,

அத்துடன் சிறுவர் பகுதியில் சிறுவர் நூல்களைக் காட்சிப்படுத்தல், நூல்களை அறிமுகம் செய்தலும் நூல் விமர்சனமும் இடம்பெறும். நாளை 21 ஆம் திகதி முற்பகல் 10.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சிறுவர் ஆளுமை விருத்தி நிகழ்வுகள் (Abacus திருமதி ராதை பாஸ்கரன்-இயக்குநர். UCMAS திருநெல்வேலி, நல்லூர், சுண்டுக்குளி அவர்களால் நடாத்தப்படும்) கதை நேரம் (American Corner இனால் நடாத்தப் படும்). சதுரங்க விளையாட்டு (த. அருணகிரி ஆங்கில போதனாசிரியர் ஆங்கிலத் துறை, விரிவுரையாளர் சதுரங் கம், விளையாட்டுத் துறை, யாழ் பல்கலைக்கழகம் அவர்களால் நடாத்தப்படும்) இடம் பெறும்.

அத்துடன் இந்தியன் பகுதியில் நாளை முற்பகல் 10.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை "அறிவோடு விளையாடுவோம்" என்ற தலைப்பில் வாசகர்களுக்கு வயது வேறுபாடின்றி வேகம், விவேகம், புதிர்ப் போட்டிகள் நடைபெறும்.

சதுரங்க விளையாட்டில் பங்குபற்றுவோர் சதுரங்கப் பெட்டி வைத்திருப்பின் கொண்டு வரவும். இந் நிகழ்வுகளில் வயது வேறுபாடின்றி அனைவரையும் பங்குபற்றிப்பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# நவராத்திரி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் நவராத்திரி விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 22.09.2025 திங்கட்கிழமை தொடக்கம் 2.10.2025 வியாழக்கிழமை வரை தினமும் மாலை 4.45 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறும் என ஆதீன கர்த்[illegible] குருக்கள் அறியதருகிறார்.(8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோவிலில் இந்த வாரத் திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி யாழ்ப் பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்ப மாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டு பட, தூக்கம் சம்பந்தபட்ட பிரச் சினை தீர, தைராய்டு பிரச் சினை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சி கள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் வழங்கப் படும்.

பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் ஜெயகிருஷ்ணன் வழங்குவார்.

தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (8)


# திருக்குறள் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திரு வள்ளுவர் மகாசபையினரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் திருக்குறள் போட்டி இவ் வாண்டும் அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் பொதுச்செயலாளர் க.சண்டேஸ் வரராஜா நெறிப்படுத்தலில் தலைவர் ச.சாம்பசிவம் தலை மையில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (3)

# கம்பர்மலை-கலைவாணி வீதி காப்பெற் வீதியாக மாற்றம்

(கரணவாய்)



தேசிய மக்கள் சக்தியின் கிராமங்கள் தோறும் வீதிகள் புனரமைப்பு எழுச்சித் திட்டத் தின் கீழ் தேசிய போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சின் ஊடாக 1300m நீளமான கம்பர்மலை வீதி நேற்றைய தினம் காப்பெற் வீதியாக மாற் றப்பட்டது.

கலைவாணி சன சமூகத் தின் நீண்ட நாள் கோரிக்கை க்கு அமைவாக குறித்த வீதி புனரமைப்பு நடைபெறுகின் றமை குறிப்பிடத்தக்கது. (8-60)

# மந்திரிமனையை பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் காணப்படும் பாரம்பரியமான மாளிகை களில் ஒன்றான நல்லூர் மந்திரி மனை பாதுகாக்கப்பட வேண் டியது அவசியமானது. இதனை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சரோடு கலந்துரையாடி, பாதுகாப்பதற்கான செயற் பாடுகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் பிமல் ரத் நாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த புதன்கிழமை பெய்த மழை காரணமாக நல்லூர் இராச தானி காலத்து மந்திரிமனை யின் ஒரு பாகம் இடிந்து விழுந் துள்ளது.

இந்நிலையில், மந்திரி மனையினை நெடுஞ்சாலை கள் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரர், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நேரில் சென்று பார்வை யிட்டனர்.

அதன் போது, தொல்லியல் திணைக்களத்தின் யாழ். பிராந்திய உதவி பணிப்பாளர் யு.ஏ பத்துலஜீவ மற்றும் தொல்லியல் திணைக்களத் தின் புனர்நிர்மாண உத்தி யோகத்தர் கபிலன் ஆகியோரு டன் அமைச்சர் கலந்துரை யாடி, மந்திரிமனையை பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தெரிவித் தார். (8-33)

# சிரமதானம்

(சாவகச்சேரி)

டெங்கு கட்டுப்பாட்டு வாரத் தினை முன்னிட்டு கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி- கோவிற் குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுர முருகன் ஆலயத்தில் சிரம தானம் மேற்கொள்ளப்பட்டது.

டெங்கு கட்டுப்பாட்டு வாரத் தின் தொடக்க நாளில் மதஸ் தானங்களில் சிரமதானப் பணி மேற்கொள்ளல் எனும் அடிப் படையில் மேற்படி செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் ஞானசேந்தனின் ஏற்பாட்டில் கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கம், ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் மற்றும் ஸ்ரீமுருகன் விளையா ட்டுக்கழக உறுப்பினர்களுடைய பங்களிப்பில் மேற்படி செயற்திட் டம் முன்னெடுக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# வீதி புனரமைப்பு ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை யின் வீதி புனரமைப்புப் பணிகள் அண்மையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம் பித்து வைக்கப்பட்டன.

நகராட்சி மன்றத்தின் மீசாலை கிழக்கு வட்டாரத் திற்குட்பட்ட அல்லாரை ஊறெல்லைத் தெரு மற்றும் குஞ்சர்துரவு வீதி என்பு வற்றின் புனரமைப்புப் பணி களே இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மீசாலை கிழக்கு வட்டார உறுப்பினர் வரேந்திரன் பிரகாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நகராட்சி மன்ற தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ், உபதவிசா ளர் ஞா.கிஷோர் மற்றும் நகரசபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு வீதிப் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

மணல் ஒழுங்கைகளாக இருந்த குறித்த வீதிகள் முதற்தடவையாக நகரசபை யின் நிதி ஒதுக்கீட்டினால் கொங்கிறீட் மற்றும் தார் வீதிகளாக புனரமைக்கப்படு கின்றன.

மீசாலை அல்லாரை ஊரெல்லை வீதி 6.7 மில்லி யன் ரூபாவில் கொங்கிறீட் வீதியாகவும், குஞ்சர்துரவு வீதி 4.4 மில்லியன் ரூபா வில் தார் வீதியாகவும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை | : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் |
| விண்ணப்பதாரரின் பெயர் | : உலகநாதன் பெண் இராகினி |
| சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் | : கந்தையா சிவலிங்கம் பெண் பொன்னம்மா |
| முகவரி | : ஆதன இல:14, பாடசாலை வீதி, பிரான்பற்று, வட்டாரம் - 07 |

வட்டாரம் 07, பாடசாலை வீதி, ஆதன இல.14 இல் அமைந்துள்ள ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் 6386/20.05.2013 ஆம் இலக்க அழியா நன்கொடை உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம், மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சங்கானை இறை வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலகம் **J/147** பிரான்பற்று "சங்கடவாசல்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு இரண்டும் குழி மூன்றும் (நில.பர.02 குழி 03) எனது காலஞ்சென்ற தாயாராகிய சிவலிங்கம் பொன்னம்மா தனது சீதன ஆதனமாக ஆண்டனுபவித்தாரென்றும் அவருக்குப் பின் அவரது ஒரே மகனாகிய நானே முப்பது வருடங்களுக்கு மேலாக பிசகு தடையற்ற ஆட்சியில் உள்ளேனென்றும் இவ்வாதனம் எனது மாதாவழிச் சொந்தமும் நிந்தமும் நீண்டகால ஆட்சியுமானது என்றும் சிவலிங்கம் வடிவேல் என்பவர் இத்தால் வெளிப்படுத்தி தனது மைத்துனியாகிய உலகநாதன் பெண் இராகினி என்பவருக்கு அழியா நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் அ.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2271 ஆம் இலக்க 2002.04.14 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 02 குளி03 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு - கணபதிப்பிள்ளை அருணாசலத்தினதும் நடராசா தேவராசாவினதும் ஆதனங்களும்
கிழக்கு - சண்டிலிப்பாய் வீதிக்குச் செல்லும் பாடசாலையின் வீதியும்
மேற்கு - சிறிகரன் ஜெயராணியின் ஆதனம்
தெற்கு - சூரிய வைரவர் கோவில் ஒழுங்கையும்

மேற்குறித்த ஆதனத்தை **உலகநாதன் பெண் இராகினியும்** என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன் .

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(5442)

## யாழ்ப்பாணம்-அரியாலை

# இலந்தைக்குளம் வீதியை காப்பெற் வீதியாக மாற்றும் வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அரியாலை இல ந்தைகுளம் வீதியை காப்பெற் வீதியாக மாற்றும் வேலைத்திட்டம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட் டது.

இலந்தைக்குளம் வீதியில் உள்ள பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவி லுக்கு முன்பாக குறித்த நிகழ்வு நடை பெற்றது. குறித்த நிகழ்வில் பாராளு மன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், வீதி அபிவிருத்தி அதி காரசபையின் வடமாகாண பணிப்பாளர் குரூஸ் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இலங்கை முழுவதும் பெருந்தெருக் கள் அமைச்சினால் அமைக்கப்படும் 100 வீதிகளின் கீழ் 890 மீற்றர் நீளமான இலந்தைக்குளம் வீதி 21.5மில்லியன் நிதியில் அமைக்கப்படவுள்ளது. (8-33)

சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

யா/மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக
04.01.2023 - 19.09.2025 வரை
கடமையாற்றி பணியில் இருந்து ஓய்வுபெற்ற
திருமதி.
வி.அ.டொமினிக்



அவரது பணி நயந்து பாராட்டி வாழ்த்துவதோடு
அவரின் ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

சேவைக்காலம்
தி/மூ/பள்ளிக் குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரி-தோப்பூர்
1998.07.15 - 1998.12.31
தி/புனித பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலயம்-திருகோணமலை
01.01.1999 - 18.10.2011
யா/யூனியன் கல்லூரி
19.10.2011 - 31.12.2022
யா/மகாஜனக் கல்லூரி
04.01.2023 - 19.09.2025

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
C-3906)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிரபல நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் காலமானார்



(சென்னை)

பிரபல தமிழ் நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் காலமானார்.

மஞ்சள் காமாலை, நீர்சத்து குறைவு மற்றும் இரத்த அழுத்தக் கோளாறு காரணமாக அவர் கடந்த சில நாட்களாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்த நிலையில், படப்பிடிப்பு நடுவில் மயக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அனுமதிக்கப்பட்ட அவர், நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் திடீர் மறைவு திரையுலகினரையும் ரசிகர்களையும் அதிர்ச்சி மற்றும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவர் சின்னத்திரையிலிருந்து தொடங்கி, பல வெற்றிப் படங்களில் தனித்துவமான நகைச்சுவை நடிப்பால் மக்களின் மனதில் அழியாத இடத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆப்கானில் இணைய சேவை துண்டித்தது தலிபான் அரசு!

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டில், சுமார் 6 மாகாணங்களில் ஃபைபர் ஆப்டிக் இணைய சேவைக்கு, தலிபான் அரசு தடைவிதித்து உத்தரவிட்டுள்ளது.

தலிபான்களின் உச்ச தலைவர் வஹிபத்துல்லா அகுந்த்சாதா பிறப்பித்த உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒழுக்கக்கேட்டைத் தடுக்க இந்த தடைவிதிக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதனால், ஆப்கானிஸ்தானின் அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் இல்லங்களில் வைஃபை இணைய வசதி துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் 16 ஆம் திகதி முதல் வடக்கு பால்க் மாகாணத்தில் வைஃபை இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களான பாக்லான், படாக்ஷான், குண்டுஸ், நான்கார்ஹர் மற்றும் தகார் ஆகிய மாகாணங்களில், நேற்று முன்தினம் முதல் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, பல்லாயிரக்கணக்கான மக்கள் அதிவேக இணைய சேவையை இழந்துள்ளனர். பல நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தங்கள் வணிகம் மற்றும் அன்றாட நடவடிக்கைகளுக்கு இணையத்தை பெரிதும் நம்பியிருப்பதால், இது பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில், தொலைபேசி நெட்வொர்க்குகள் வழியாக மட்டுமே இணையத்தை அணுக முடியும். ஆனால் அதுவும் அடிக்கடி துண்டிக்கப்படுவதால் சிரமமான சூழல் ஏற்பட்டுள்ளது. (நி)

# வரவு-செலவுத் திட்ட

# பிரான்ஸ் முழுவதும் ஆ

# - போராட்டம்

(பாரிஸ்)

அரசாங்கத்தின் சிக்கன ந

கைகளுக்கு எதிராக பிரான்ஸ் மு

வியாழக்கிழமை முன்னெடுக்

போராட்டங்களில் இலட்சக்க

னோர் பங்கேற்றனர்.




ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனும் அவரது புதிய பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னுவும் சமர்ப்பிக்கப்படவுள்ள தங்களது வரவு-செலவுத் திட்ட வெட்டுக்களை கைவிடுமாறும் வலியுறுத்தினர்.

போராட்ட நாளின் ஒரு பகுதியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களில் ஆசிரியர்கள், ரயில் சாரதிகள், மருந்தாளுநர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் அடங்குவர்.

அதே நேரத்தில், பதின்ம வயதினர் உயர்நிலைப் பாடசாலைகளை மணிக்கணக்கில் முற்றுகையிட்டனர்.


போராட்டக்காரர்களும் தொழிற்சங்கங்களும் முந்தைய அரசாங்கத்தின் நிதித் திட்டங்களைக் கைவிட வேண்டும், பொது சேவைகளுக்கு அதிக செலவு செய்ய வேண்டும், செல்வந்தர்கள் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டங்களுக்கு எதிராக ...ஆயிரக்கணக்கானோர்

## ...ம் -

...........
நடவடிக்
முழுவதும்
...க்கப்பட்ட
...கணக்கா





அதிக வரிகள் விதிக்க வேண்டும், ஓய்வூதியம் பெற மக்கள் நீண்டநேரம் வேலை செய்ய வைக்கும் ஒரு பிரபலமற்ற மாற்றத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர்.

வேலைநிறுத்தங்கள் மற்றும் போராட்டங்களில் 1 மில்லியன் மக்கள் பங்கேற்றதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சில போராட்டக்காரர்கள் வணிகங்கள் மற்றும் கட்டடங்களை சேதப்படுத்தியதை அடுத்து, கலவரத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் தலைநகரின் மையத்தில் கூட்டத்தைக் கலைக்க கண்ணீர் புகை குண்டுகள் மற்றும் கேடயங்களைப் பயன்படுத்தினர்.

முன்னாள் பிரதமர் பிரான்சுவா பேரூவின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் நெருங்கிய நண்பரான செபாஸ்டியன் லெகோர்னு பிரதமராக நியமிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குப் பின்னர் இந்தப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

போராட்டங்களால் வியாழக்கிழமை பொதுப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

பாரிஸில் பல மெட்ரோ பாதைகள் மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.


அதே நேரத்தில் பிரான்ஸ் முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் போராட்டக்காரர்கள் வீதிகளை மறித்தனர்.

தலைநகர் மற்றும் அதற்கு அப்பால் உள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு முன்னால் மாணவர்கள் கூடி, நுழைவாயில்களைத் தடுத்து, கோஷங்களை எழுப்பினர்.

ஆசிரியர்களில் மூன்றில் ஒரு பங்கு பேர் வெளிநடப்பு செய்தனர்.

மருந்தாளுநர்களும் கூட்டமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். (நி)

# தங்க நிறத்தில் ட்ரம்பிற்கு சிலை



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கையில் "பிட்காயின்" எனப்படும் மெய்நிகர் நாணயம் வைத்திருப்பது போன்ற, 12 அடி உயர தங்க நிறத்தாலான சிலை நிறுவப்பட்டுள்ளது.

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் உள்ள பாராளுமன்றுக்கு வெளியே, நேஷனல் மால் பகுதியில் கையில் பிட்காயின் ஏந்தியபடி இருக்கும் ட்ரம்பின் 12 அடி உயர பொன்நிற சிலை நிறுவப்பட்டுள்ளது.

இச்சிலை மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன், பல்வேறு விவாதங்களையும் கிளப்பியுள்ளது.


அந்நாட்டின் மத்திய வங்கியான, பெடரல் வங்கி, கடந்த 2024 டிசம்பருக்கு பின் தற்போது அதன் வட்டி விகிதத்தை 25 சதவீத அடிப்படை புள்ளிகள் குறைப்பதாக அறிவித்தது.

அறிவிப்பு வந்த அதே நேரத்தில் இச்சிலை திறக்கப்பட்டுள்ளது.

மேலும், இச்சிலைக்கு கிரிப்டோ கரன்சி முதலீட்டாளர்கள் நிதியளித்துள்ளதாக கூறப்படுகிறது.

கிரிப்டோ கரன்சிக்கு வெளிப்படையாக ஜனாதிபதி ட்ரம்ப் ஆதரவு வழங்கி வருவதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், டிஜிற்றல் நாணயத்தின் எதிர்காலம், பணவியல் கொள்கை மற்றும் நிதி சந்தைகளில் அரசின் பங்களிப்பு குறித்த விவாதத்தை தூண்டும் நோக்கத்துடன் இச்சிலை நிறுவப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பிரித்தானியாவில் ட்ரம்புக்குப் பிரமாண்ட அரச விருந்து



(லண்டன்)

பிரிட்டனுக்கு அரசு முறைப் பயணமாக சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு, பக்கிங்ஹாம் அரண்மனையில் பிரித்தானிய அரச குடும்பத்தினர் பிரமாண்டமான அரச விருந்து அளித்துள்ளனர்.

விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மண்டபத்தில், 155 அடி நீளமுள்ள மேசை அமைக்கப்பட்டது. இந்த மேசை முழுக்க, வெள்ளிப் பாத்திரங்கள், தங்க நிறத்திலான பொருட்கள், மற்றும் மெழுகுவர்த்தி அலங்காரங்கள் இடம்பெற்றிருந்தன.

விருந்திற்காக பிரிட்டன் இராணுவத்தின் பாதுகாப்புப் பிரிவினர், அரண்மனையின் ஊழியர்கள் என நூற்றுக்கணக்கானோர் பணியாற்றியதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு அளிக்கப்பட்ட இந்த வரவேற்பு, அமெரிக்கா - பிரிட்டன் இடையிலான வலுவான உறவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி-பா-36
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L,சாரதி
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15435

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி-பா- 39 1/4
உயரம்:5'4"
தகைமை/தொழில்-BTech,Engineer
எதிர்பார்ப்பு:Engineer, IT Field, BSc Graduates
தொ.இ: B/15436

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
உயரம்:5'5"
தகைமை/தொழில்:O/L, Painting
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15437

பிறப்பு: 1975- இந்து
நட்சத்திரம்:உத்தரம்
12இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: IT Diploma, Banker
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15438

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம்:மகம்
தகைமை/தொழில்: கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15439

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: கேட்டை
7இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15461

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-சதயம்
7இல்சூரிசெவ்
கி-பா- 95
உயரம்: 5'
தகைமை/தொழில்: MLT
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/15462

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-ரேவதி
கி.பா -06
உயரம்-5'4"
தகைமை/தொழில்: BSc,MSc Engineer (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15463

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி.பா - 43 1/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -MBBS, Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/15465

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
8இல்செவ்
கி.பா - 94
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc, Senior Opreation Analyst
எதிர்பார்ப்பு: Only London (PR)
தொ.இ: G/15466

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# நீரினால் பரவும் அமீபா தொற்று

(டில்லி)

தென்னிந்திய மாநிலமான கேரளாவில், நீரினால் பரவும் "மூளையை உண்ணும்" அமீபா குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆண்டு Niegleria fowleriamoeba நோய் தொற்றினால் 72 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இரண்டு மடங்கு அதிகமாக குறித்த தொற்றினால் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன.

இந்த தொற்று காரணமாக இம்மாதத்தில் மட்டும் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்நாட்டு அறிக்கையின்படி, இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் மூன்று மாத குழந்தையும் உள்ளடங்கும். நீரினால் பரவும் இந்த தொற்றுகள் மூளையைப் பாதித்து மூளை திசுக்களை அழிக்கக்கூடியது என்பதால் இது "மூளையை உண்ணும் அமீபா" என்று அழைக்கப்படுகிறது.

அமீபா தொற்று ஏரிகள் மற்றும் ஆறுகளில் காணப்படுகிறன.

இவை மூக்கின் வழியாக மூளையை சென்றடைகிறது.

உலக சுகாதார அமைப்பு (WHO) பாதிக்கப்பட்டவர்களிடையே தலைவலி, காய்ச்சல் மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகளைப் பட்டியலிட்டுள்ளது, மேலும் இது விரைவாக வலிப்புத்தாக்கங்கள், மனநிலை மாற்றம், மற்றும் கோமா ஆகிய நோய்களுக்குள்ளாக்குகிறது.

இந்தத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து பதிவாகியுள்ளன. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 200 | 180 | 160 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 170 | 200 |
| தக்காளி | 200 | 250 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 260 | 250 | 180 | 200 |
| கரட் | 350 | 300 | 280 | 300 |
| பூசணி | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 160 | 150 | 120 | 240 |
| வாழைக்காய் | 120 | 100 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 200-350 | 250 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 450 | 400 | 600 | 600 |
| வெண்டைக்காய் | 150 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 320 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 250 | 300 | 350 | 400 |
| லீக்ஸ் | 200 | 300 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 200 | 80 | 120 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 180 | 400 |
| போஞ்சி | 550 | 350 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 80 | 300 | -- | 120 |
| கீரை – 1 பிடி | 60-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 1300 | 600 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 280 | 160-220 |
| இராசவள்ளி | 600 | 600 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 160 | 150 | 100 | 240 |
| பொன்னாங்காணி | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 250 |

# இராசிபலன்

20.09.2025
புரட்டாதி 04, சனிக்கிழமை
சதுர்தசி பிற்பகல் 12.56 மணி வரை

மகம் முற்பகல் 9.55 மணிவரை
சுப நேரம் 3.03- 4.33 மணிவரை
இராகு காலம் 9.03-10.33 மணிவரை

சஸ்திரஹத மஹாளயம்.

வளவன்

**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்ததிவர்களால் சந்தோசம் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் குடும்பப் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்வார்கள்.

**கடகம்** புதிய பொருள் செயற்கையுண்டு, உங்கள் கருத்துக்களுக்கு கௌரவம் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தினரிடையே தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்.

**ரிஷபம்** உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவர், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** செய்தொழில் வளர்ச்சிக்கு எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கும்பம்** மதி நுட்பத்தால் மகத்தான காரியங்களை செய்து செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே ஒற்றுமை கூடும், போசக சுகமுண்டு.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயன சுக குறைவுண்டு.

**தனுசு** அரைகுறையாக இருந்த காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், போசன சுகமுண்டு.

**மீனம்** உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள்.

Digitized by Noolaham Foundation.

# நாய்ப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

கடந்த வாரம் தொடக்கம் கௌரவ வடக்கு மாகாண ஆளுநர் திரு வேத நாயகனின் பணிப்புரைக்கு அமைய வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் சுகாதாரத் திணைக்களம் என்பன இணைந்து நாய்களைக் கட்டுப்படுத்தும் சத்திர சிகிச்சைச் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளன. இது ஒரு சிறந்த முன்மாதிரியான நடைமுறை. இலங்கையில் முதன் முறையாக இவ்வாறு பல திணைக்களங்கள் இணைந்து நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முயல்வது இடம்பெறுகிறது.

கடந்த வாரங்களில் நான் குறிப்பிட்டது போல் இலங்கையில் பெரும் சவாலாக மாறி இருப்பது வீதிகளில் திரியும் கட்டா காலி நாய்களின் பெருக்கம். வீதிகளில், பள்ளிகூடங்களில் ,ஆலயங்களில், சந்தைகளில்,மருத்துவ மனைகளில், நலன்புரி நிலையங்களில் மற்றும் , இராணுவ,பொலிஸ் நிலைகளில் எல்லாம் இந்த பிரச்சினை பாரதூரமாக காணப்படுகிறது.

இந்த கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தால் சமூக பொருளாதார ரீதியாக பல பிரச்சனைகள் ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. நாய்க்கடிகளும் நாய்களால் ஏற்படும் விபத்துகளும் அண்மைகாலத்தில் அதிகரித்திருப்பதை பல புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இந்த கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த முடியாமல் திணைக்களங்கள் திணறி வந்த நிலையில் வடக்கு மாகாணம் திணைக்களங்களை ஒருங்கிணைத்து நாய்களை கட்டுப்படுத்த முயல்வது பாராட்டுதலுக்குரிய விடயமாகும்.


சாதாரணமாக இயற்கையில் ஆண், பெண் நாய்களின் விகிதம் 50:50 ஆகும். எனினும் எமது சமூகங்களில் வளர்ப்பு செல்ல பிராணிகளாக 75% இற்கும் அதிகமான விகிதத்தில் ஆண் நாய்களும் 25%இற்கு குறைவான விகிதத்தில் பெண் நாய்களும் காணப்படுகின்றன. குட்டி ஈனுகின்ற காரணத்தால் ஏற்படும் தொல்லைகளால் பெண் நாய்களுக்கு இந்த மரியாதைக் குறைவு. இதன் மறுதலை என்னவென்றால் அதிக கட்டாக்காலி நாய்களாக பெண் நாய்களே காணப்படுகின்றன எனலாம்.

நாய்க்குட்டிகளை சந்தைகளிலும் மீன்,இறைச்சிக்கடைகளிலும் போடுகிற பழக்கம் எம் சமுதாயத்தில் இன்றும் காணப்படுவதையும்,அந்த குட்டிகள் சொறி சிரங்குகளுடன் அங்கு அலைந்து திரிவதையும் வாகனங்களுக்குள் அகப்பட்டு இறப்பதையும் அன்றாடம் காண்கிறோம். ஒரு சில பெண் நாய் உரிமையாளர்கள் தமது நாய் உரிமையை மறைப்பதையும் தடுப்பூசி ஏற்ற பின் நிற்பதையும் காணக்கூடியதாகவும் உள்ளது.

முன்பெல்லாம் பிரதேச சபைகளும் நகர சபைகளும் நாய்களை பிடிப்பதையும் நஞ்சூட்டியும், கடலுக்குள் தள்ளியும், சுட்டும், புகை போட்டும் அவற்றை கொன்றதையும் பார்த்திருக்கிறோம் இதற்காக விசேட வாகனங்களும் ஊழியர்களும் இருந்தார்கள். எனினும் மிக நீண்ட கால விலங்கு நல ஆர்வலர்களின் போராட்டமும் அரசாங்கத்தின் மிருக வதை தடை சட்டமும் இந்த மனிதாபிமானமற்ற முறைகளை நிறுத்தியுள்ளன.

எனவே இந்த மித மிஞ்சிய நாய் பெருக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்று கேள்வி ஏற்படலாம். இந்த பிரச்சனைக்கு தீர்வு இல்லையா என ஐயம்எழலாம்.கருத்தடை முறைகள் எனும்போது இரண்டு வகையான முறைகள் உள்ளன. ஆண் நாய்களுக்கான கருத்தடை (castration), பெண் நாய்களுக்கான கருத்தடை (overiohy sterectomy) என்பனவே அந்த முறைகள் ஆகும் .ஆண் நாய்கள் சத்திர சிகிச்சை மூலமே கருத்தடைக்கு உட்பட வேண்டும். கிராமங்களில் மனிதாபிமான மற்ற ஆண் நாய் கருத்தடை முறைகளும், இதற்காக சில கிராமத்து பரிகாரிகளும் உள்ளனர் என்பது வேறு கதை.

பெண் நாய்களை பொறுத்தவரை ஊசி மூலமான கருத்தடை முறைகளும் காணப்படுகின்றன. dippo provera எனப்படும் மருந்து மூலம் இந்த கருத்தடை செய்யப்படுகிறது. இந்த மருந்து 3-6 மாதங்களுக்கு மட்டும் நாய்களை கருக்கட்டாமல் தடுக்கும். அதாவது தற்காலிக கருத்தடை முறை. மீண்டும் மீண்டும் 6 மாதத்திற்கு ஒரு முறை ஊசி போடவேண்டிய தேவையும் உள்ளது.



இதை விட dippo provera மருந்து மிக அதிக பக்க விளைவுகளை கொண்டது. குறைந்தது இரண்டு தடவைக்கு மேல் ஊசி ஏற்றப்படும் பட்சத் தில் பெரும்பாலும் pyometra எனப்படும் பக்கவிளைவை ஏற்படுத்தும். அதாவது கர்ப்பபையில் நோய் தொற்றுடன் கூடிய நிலை ஏற்படும். இந் நிலைமை நாய்களை மரணம் வரை கொண்டு செல்லக்கூடியது. எனவே இந்த ஊசி மூலமான கருத்தடை சிறந்தது கிடை யாது.

நிரந்தர சத்திர சிகிச்சை முறை சாலச்சிறந்தது. ஆபத்து குறைவு. இந்த சத்திர சிகிச்சைகள் சாதாரணமாக மிருக வைத்திய சாலைகளிலும் தனியார் சிகிச்சை நிலையங்களிலும் பதிவு பெற்ற மிருக வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும்பாலும் வளர்ப்பு நாய்களைத்தான் இங்கு கருத்தடை செய்ய முடியும்.மிருக வைத்தியர்களின் நேரப்பளுவும் வேலைப் பளுவும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மருந்துகளின் வரையறையும் ஆளணிக் குறைவும் கட்டாக்காலி நாய்களை கருத்தடை செய்யவிடாமல் தடுக்கின்றன.

இதுவரை காலமும் சுகாதார திணைக்களத்தின் விலங்கு விசர் தடுப்பு பகுதியூடாக பொது சுகாதார அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் தனியார் கால்நடை வைத்தியர்களின் மூலம் செய்யப்பட்ட கருத்தடை சிகிச்சைகள் இந்த வருடம் முதல் வடக்கு மாகாணத்தில் கால்நடை உற்பத்தி பல திணைக்களங்களின் கூட்டிணைவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2018 களில் கால்நடை வைத்தியர்கள் நிரந்தரமாக உள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் சிறப்பாக இந்த கருத்தடை மற்றும் தடுப்பூசி நடைமுறையை செய்திருந்ததும் அன்றைய சுகாதார அமைச்சரான ராஜித சேனாரத்னவின் தேவையற்ற அரசியல் தலையீடு காரணமாக மீளவும் சுகாதார அமைச்சிடம் சென்றிருந்தது. அவர்கள் கருத்தடை சிகிச்சையை ஒப்பந்த அடிப்படையிலான தனியார் கால்நடை வைத்தியர்களையே பாவிக்கமுடியும்.அரச கால்நடை வைத்தியர்களை விட அதிகளவில் கொடுப்பனவும் வழங்க வேண்டும். கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட நெருக்கடி மற்றும் கால்நடை வைத்தியர்களின் பற்றாக்குறை மேற்படி கருத்தடை சிகிச்சையை சுகாதார அமைச்சால் திறம்பட செய்ய முடியவில்லை.

நாய்களை பொறுத்தவரையில் தங்களுக்குள் ஒரு ஆளுகை பகுதியை (territory) வைத்திருக்கும்.வீட்டு நாய்கள் தத்தமது வீட்டு சூழலை தமது ஆளுகை பகுதியாக வைத்திருக்கும். அதற்குள் வேறு நாய்களை வரவிடாது. இதே போல் கட்டாக்காலி நாய்களும் தமக்கு என்று ஒரு ஆளுகைப் பகுதியை கொண்டிருக்கும். நாய்களை கொன்று ஓரிடத்திலிருந்து அப்புறப்படுத்தும் போது அந்த ஆளுகை பகுதி ஆளுபவர் இன்றி வெற்றிடம் ஆகும். அங்கு காணப்படும் உணவு கழிவுகளும் வேறு நாய்களை கவர்ந்து அந்த வெற்றிடத்தை நிரப்ப வழி ஏற்படுகிறது. புதிய நாய்கள் குடியேறுகின்றன. எனவே நாய்களை கொல்வது சரியான கட்டுப்பட்டு முறை அன்று. நிரந்தர கருத்தடை செய்து விசர் நாய்கடி ஊசி ஏற்றி அந்த நாய்களை அதே இடத்தில் விடும் பட்சத்தில் ஒரு 5- 10 வருடங்களுக்கு தனது ஆளுகைப் பகுதியை காக்க புதிய நாய்களை வர விடாமல் தடுப்பதோடு குட்டி ஈனுவதும் தடைபடும். இலங்கை ஒரு தீவு ஆனபடியால் இந்த வகை கட்டுப்பாட்டு முறை சாத்தியமானதே.

யுத்த சூழல் காரணமாக தோற்றுவிக்கப் பட்ட இராணுவநிலைகளும் நலன்புரி முகாம்களும் அதிக மனித வளம் காரணமாக உணவு கழிவுகளை அதிகம் உற்பத்திசெய்கின்றன. இவற்றின் மூலம் அதிக கட்டாக்காலி நாய்களின் உணவு தேவை பூர்த்தியாகி இருந்தன. தற்போது படிப்படியாக அவை அகற்றப் படும் நிலையில் இந்த இடங்களில் தங்கி இருந்த கட்டாக்காலி நாய்களுக்கு உணவு சங்கிலியை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே அவை குடிமனைப் பகுதிக்கு வருகின்றன. அத்துடன் சில இராணுவ பாதுகாப்பு நிலைகளில் உள்ள நாய்களின் சரியான விபரம் அதிகாரிகளுக்கு கிடைப்பதில்லை. இதனால் சரியாக தடுப்பூசித் திட்டங்களை நடைமுறைப் படுத்த முடியாத நிலையும் உள் ளது.இராணுவ அதிகாரிகளுடன் ஒத்துழைத்து இந்த விபரங்களை பெற்று தடை முயற்சிகளையும் தடுப்பூசி சிகிச்சையும் செய்ய வேண்டும். விலங்குகள் சுயாதீனமாக சகல இடங்களுக்கும் சென்று வரக் கூடியன. எனவே திட்டமிடும்போது அந்த இடங் களையும் கருத்தில் எடுக்க வேண்டும்.

வீதிகளில் ஏற்படும் சில வாகன விபத்துகளுக்கு குறிப்பாக மோட்டார் சைக்கிள் விபத்துகளுக்கு நாய்கள் காரணமாக அமைகின்றன. இலங்கையில் வருடம் தோறும் 25-30 விலங்கு விசர் மரணங்கள் ஏற்படுகின்றன. ஏறக்குறைய 300,000 விலங்குக்கடிகள் நிகழ்வதாக சுகாதார அமைச்சின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. மிக அதிகமாக 95% நாய்களாலேயே விலங்கு விசர் நோய் ஏற்படுகிறது. பூனை,நரி,மரநாய் முதலியவற்றால் மிகுதி நோய்த் தொற்று ஏற்படுகிறது.

அரசாங்கம் வருடம் தோறும் பல மில்லியன் ரூபாய்களை இந்த நோயை ஒழிக்கச் செலவிடுகிறது. தடுப்பூசிகள், கருத்தடை சத்திரசிகிச்சைகள் விழிப்பு ணர்வு விளம்பர முயற்சிகளுக்கு இந்த பணம் செலவிடப்படுகிறது இலங்கையில்தான் இந்த சேவைகள் அதிகளவில் இலவசமாக நடக்கிறது. 1:6 என்று இருந்த நாய் : மனித விகிதத்தை அதிகரிக்க பாடுபடுகிறது. 2030 ஆம் ஆண்டளவில் முற்றாக விலங்கு விசர் நோயை ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கபட்டுள்ளது. பொது மக்களும் திணைக்களங்களும் இணைந்து குப்பைகளை, கழிவுகளை சரியாக அப்புறப்படுத்தி, செல்லப் பிராணிகளுக்கு கருத்தடைகளை செய்து தடுப்பூசி ஏற்றி சரியான இடத்தில் சரியான சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் பெற்று இந்த மாபெரும் வேலைத் திட்டத்தை முன் எடுக்க வேண்டும். இதற்குரிய திணைக்களங்கள் பொருத் தமான அளணிமயப்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் விலங்கு விசர் நோயை ஒழிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 869





"ஆகா! அந்தக் கரையர் மகளின் பெயர் மந்தாகினியா? அவள் உயிரோடிருப்பது தங்களுக்கு எப்போது தெரிந்தது.?"

"தேவி! இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அது எனக்குத் தெரிந்த விஷயந்தான்."

"என்ன? என்ன? இருபத்தைந்து வருஷங்களாகத் தெரிந்துமா என் தந்தையிடம் தாங்கள் சொல்லவில்லை? ஐயா! அவள் இறந்துவிட்டாள் என்ற எண்ணத்தினால் என் தந்தை எத்தனை மனோவேதனைக்கு உள்ளானார் என்பதெல்லாம் தங்களுக்குத் தெரியாதா?"

"தெரியும் தாயே! தெரியும்."

"தெரிந்துமா அவரிடம் உண்மையைச் சொல்லாதிருந்தீர்கள்?"

அநிருத்தர் ஒரு நெடிய பெருமூச்சு விட்டார். அவர் உள்ளத்தில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது என்பதை அவருடைய முகம் எடுத்துக் காட்டியது பின்னர் அவர் கூறினார்:

"தேவி! இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் நான் ஒரு குற்றம் செய்தேன். முதன்முதலாக அதை இப்போது தங்களிடந்தான் சொல்லுகிறேன். கரையர் மகளைத் தேடி வரும்படி தங்கள் தந்தை என்னை அனுப்பினார் அல்லவா? விரைவாகக் குதிரை மீது செல்லும் ஆட்களுடன் நானும் போனேன். கோடிக்கரை போய்ச் சேர்ந்தோம். அங்கே கொந்தளித்துக் கொண்டிருந்த கடலில் அவள் கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து விழுந்துவிட்டாள் என்பதை அறிந்தோம். அந்தப் பயங்கரக் காட்சியை நேரில் பார்த்தவர்கள் சொன்னார்கள். தியாக விடங்கரே நடுங்கிய குரலில் நாக்குழறக் கூறினார். அதைத்தான் நானும் தஞ்சாவூருக்கு வந்து என் நண்பரிடம் தெரிவித்தேன்"

"இதில் தங்கள் குற்றம் என்ன, ஐயா?" என்றாள் குந்தவை. "குற்றம் இதுதான் கரையர் மகள் கடலில் விழுந்தாளே தவிர, அதிலே முழுகிச் சாகவில்லை. அந்தக் கொந்தளித்த கடலில் படகு விட்டுக் கொண்டு வந்த வலைஞன் ஒருவன் அவளைக் கண்டெடுத்துப் படகில் ஏற்றிக் காப்பாற்றிவிட்டான். கோடிக் கரைக்கு வெகு தூரத்தில் அப்பால் அவன் வந்து கரையேறினான். திரும்பி வரும் வழியில் நான் அந்தக் கரையேறும் படகைப் பார்த்தேன். அதில் இருந்த பெண் யார் என்பதையும் தெரிந்து கொண்டேன். அந்தப் படகுக்காரனிடம் நிறையப் பணம் கொடுத்து அவளைப் பத்திரமாக இலங்கைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்படியும் அங்கேயே இருக்கும்படியும் கூறினேன். அவனும் சம்மதித்துச் சென்றான். நான் திரும்பித் தஞ்சைக்கு வந்து கரையரின் மகள் கடலில் விழுந்து மாண்டு விட்டதாகக் கூறினேன். தங்கள் தந்தைக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டுதான் மனமறிந்து அத்தகைய குற்றத்தைச் செய்தேன். அந்தக் குற்றம் இத்தனை காலத்துக்குப் பிறகு இப்படி ஒரு விபரீதமான விளைவை உண்டாக்குமென்று எதிர்பார்க்கவில்லை"

இளையபிராட்டி குந்தவை அப்போது குறுக்கிட்டு, "ஐயா! தாங்கள் செய்தது குற்றமாயிருந்தாலும் என் தந்தைக்கு நன்மை செய்யும் எண்ணத்துடனேயே செய்தீர்கள். பிறகு, அக்கரையர் மகளைப் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டு வந்தீர்களா?" என்று கேட்டாள்.

(தொடரும்...)

## கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ள வீதி விபத்துக்கள்

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டிய பொலிஸ் அதிகாரி

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டில் வீதி விபத்துக்களினால் ஏற்படும் இறப்புக்கள் கணிசமாகக் குறைந்துள்ளதாக பொலிஸ் அதிகாரி சுட்டிக்காட்டினார்.

போக்குவரத்துத் தொடர்பான யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் போக்குவரத்து அமைச்சர் பிமல்ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு வீதி விபத்துக்கள் தொடர்பாக தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் விபத்துக்களால் ஏற்படும் இறப்பு விகிதம் கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் குறைந்துள்ளது.

வீதிவிபத்துக்களுக்கு மூல காரணமாக இருப்பது மோட்டார் சைக்கிள்கள் என்றும்,பிரதான வீதியிலிருந்து குறுக்கு வீதிகளுக்கு திரும்பும்போதும் குறுக்கு வீதிகளிலிருந்து பிரதான வீதிகளுக்கு திரும்பும் போதுமே அதிக விபத்துக்கள் சம்பவிப்பதாகவும் இதில் அநேகம் புதிய நவீனவகை மோட்டார் சைக்கிள்களே சிக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-நி)

## நீர்வடிகான்களை தூய்மைப்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் நகரசபை எல்லைக்குள் நீண்டகாலமாக துப்பரவு செய்யப்படாமல் உரிய பராமரிப்பின்றி பிளாஸ்ரிக் மற்றும் ஏனைய கழிவுகளால் நிறைந்து காணப்பட்ட பிரதான வாய்க்கால்களை தூய்மைப்படுத்தும் பணிகள் ஆரம்பமாக இம்மாத இறுதிவரை இடம்பெறவுள்ளது.

மழைகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் மன்னார் நகர்பகுதிக்குள் ஏற்படும் வெள்ளப்பாதிப்புக்களை குறைக்கும் முகமாக நகரசபை ஊழியர்கள், உறுப்பினர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களின் பங்கு பற்றுதலுடன் குறித்த துப்பரவு பணிகள் இடம் பெற்று வருகின்றன.

எமில்நகர் தொடக்கம் பனங்கட்டு கொட்டு பகுதியாக கழிவு நீர் வடிந்தோடி கடலுடன் கலக்கும் பிரதான கால்வாய் முதல் கட்டமாக சுத்தப்படுத்தப்பட்டு கழிவுகள் அகற்றப்பட்டதுடன் இதனை தொடர்ந்து இம்மாதம் முழுவதும் பிரதான வாய்க்கால்கள் அனைத்தும் நகரசபையால் தூய்மைப்படுத்தப்படவுள்ளன.

அதே நேரம் இம் முறை வடிகால் துப்பரவுக்காகவும் பராமரிப்புக்காவும் மன்னார் நகர சபையால் 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)

## யாழில் புதிதாக மூன்று இடங்களில் சமிக்ஞை விளக்குகள்

### வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் புதிதாக மூன்று இடங்களில் வீதிச் சமிக்ஞை விளக்குகளைப் பொருத்தவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடந்த போக்குவரத்து தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற் கண்ட தகவலை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். மாவட்டத்தில் வீதிச் சமிக்ஞை விளக்குகளைப் பொருத்த பல்வேறு இடங்கள் அடையாளப் படுத்தப்பட்ட நிலையில்,அதில் மிக முக்கிய மூன்று இடங்கள் எம்மால் இனங்காணப்பட்டு அதற்குரிய பூர்வாங்க வேலைகளைத் தொடங்கவுள்ளதாக தெரிவித்தார்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி முட்டாஸ்கடைச் சந்தி, மருதனார் மடச்சந்தி மற்றும் கைதடிச் சந்தி ஆகிய இடங்களில் வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-நி)

## பரிசில் வழங்கல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி, யா/ விக்னேஷ்வரா கல்லூரியின் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்கபல் 1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் பொ.அரவிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர். நல்லதம்பி சிவசங்கர், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி மேம்பாட்டு துணைக் கல்வி பணிப்பளார் பசுபதி அருந்தவசெல்வம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதநேயத்தோடு மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டால், தனது மரியாதை தானே உயரும்.
– அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## மழை நீர் வழிந்தோட வகை செய்மினே!

மாரி காலம் ஆரம்பித்துவிட்டது. பொதுவில் வீதி திருத்தப் பணிகளாயினும் வடிகால் புனரமைப்பாயினும் அவற்றை மழை காலங்களில் ஆரம்பித்து நனைத்துச் சுமப்பதுதான் எங்களின் திட்டமிடலாக இருந்து வருகிறது.

இப்போதுகூட, யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்துக்கு முன்பான பண்ணைப் பெரு வீதியை இணைக்கும் வீதி குன்றும் குழியுமாக கிடந்த போது, அதைச் செப்பனிடுங்கள் எனப் பல தடவைகள் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

எனினும் அதற்கு இப்போதுதான் விதி வந்துள்ளது என ஆறுதல் அடையும் அளவில் திருத்தப் பணிகள் தொடங்க, அண்மையில் பெய்த மழை அந்த இடத்தில் பெரு வெள்ளமாகத் தேங்கி புனரமைப்புப் பணிக்கு இடையூறாயிற்று.

இனி அந்த வீதியின் திருத்தப் பணி எப்போது நிறைவடையும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அதேவேளை மழை காலம் என்பதால் அந்த வீதியால் பயணிப்பவர்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொள்வர் என்பதும் நிறுதிட்டமான உண்மை.

இங்குதான் எங்களின் அசமந்தங்களும் கால தாமதங்களும் பொதுமக்களுக்குத் தீராத் துன்பத்தைத் தருகின்றன என்பதோடு அஃது ஒருபுறமிருக்க, மழை காலத்தில் மழை நீர் வழிந்தோடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது கட்டாயமாகிறது.

அதிலும் குறிப்பாக, வீதிகளின் ஓரங்களில் மழை நீர் மண்ணில் உறிஞ்சப்படுவதற்கும் வீதியில் தேங்கும் மழை நீர் வீதியோரமாக வழிந்தோடுவதற்கும் ஏற்றதாக ஒழுங்குபடுத்தல்கள் செய்யப்படுவது அவசியம்.

இருந்தும் இப்போது வட மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண நகரத்திலுள்ள பிரதான வீதிகளின் ஓரங்கள் மண் திட்டிகளாகவும் கற்குவியல்களாகவும் காணப்படுகின்றன.

இதற்கும் மேலாக, வீதி ஓரங்களில் குப்பைகளும் வாழைக் குற்றிகளும் தறித்த மரங்களுமாக வீதி ஓரங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

சுருங்கக்கூறின் பாதசாரிகள் வீதியோரமாக நடந்து செல்ல முடியாத அளவில் வீதிகளின் இரு மருங்கும் தடைப்பட்டுள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் சபைகள் குறித்த வீதி ஓரங்களை ஒழுங்குபடுத்தி, அங்கிருக்கக்கூடிய மண்திட்டிகள், கற்குவியல்கள் மற்றும் வீதி ஓரங்களை ஆக்கிரமித்து குடியிருப்பாளர்கள் அமைத்த சிமெந்து கட்டுக்களை அகற்றி,ள அந்த இடங்கள் சீரமைக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் மழை நீர் மண்ணில் உறிஞ்சப்படுவதற்கும் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதைத் தடுப்பதற்கும் மழை காலத்தில் இட்டல் இடைஞ்சல் இன்றி மாணவர்களும் இதர பாதசாரிகளும் வீதியோரமாக நடந்து செல்வதற்கும் வசதியாக இருக்கும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இப்பணியை விரைவுபடுத்துவது அவசியமாகும்.

## துறையூர் மீன் சந்தை விவகாரம்

# வேலணை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கடும்வாக்குவாதம்

(யாழ்ப்பாணம்)

வேலணை துறையூர் மீன் சந்தையின் வரி அறவீடு குறித்த சர்ச்சையால் வேலணை பிரதேச ஒரு ங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

வேலணைப் பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுக் காலை 10.15 மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதேசத்தின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பொது அமைப்புக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், துறைசார் அதிகாரிகள் விவாதித்தனர்.

இதன் ஒரு பகுதியாக துறையூர் மீன் சந்தையின் குத்தகை மற்றும் வரி அறவீடு குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் பிரதேச சபை வரி அறவீடு செய்ய வலியுறுத்தியதுடன் அது தொடர்பிலான சபையின் சுற்றுநிருபங்களையும் காண்பித்தனர்.

ஆனால் குறித்த சந்தை இறங்குதுறை என்றும் தாம் வரி அறவீட்டை எதிர்ப்பதாகவும் தமது அறுவடை மீன்களை விற்க இலவசமாக அனுமதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதனால் உறுபினர்களுக்கும் சந்தையின் சார்பான அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

வாக்குவாதம் முற்றி ஒரு கட்டத்தில் சந்தை சார்பான சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்கள் இருந்த இருக்கை நோக்கி எழுந்து சென்றதால் கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகள் சென்று குறித்த அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கட்டுப்படுத்தினர்.

இந்நிலையில் வேலணையின் தீராப்பிரச்சினையாக உருவெடுத்துள்ள குறித்த துறையூர் சந்தையின் தீர்வுக்காக பிரதேச செயலர், பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் தலைமையில் கடற்றொழில் சமூக அமைப்புகளை ஒன்றிணைத்து விசேட குழு ஒன்றை அமைத்து ஆராய்ந்து தீர்வை எட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் அறிவுறுத்தியிருந்தார். (ம-7,104)

## இலங்கை கிரிக்கெட் அணியின் வெற்றி

# சோகமாக மாறிய தருணம்

## துனித் வெல்லாலகேவின் தந்தை காலமானார்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் இளம் வீரர் துனித் வெல்லாலகேவின் தந்தை சுரங்க வெல்லாலகே தனது 54வது வயதில் மாரடைப்பால் காலமானார்.

இலங்கை அணி தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வரும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்றுள்ளது.

நேற்று முன்தினம் இலங்கை அணி ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் ஆறு விக்கெட்டுகளினால் வெற்றி ஈட்டியது.

இந்தப் போட்டியில் துனித் வெல்லாலகே இலங்கை அணி சார்பிலான இறுதிப் பந்து ஓவரை வீசியிருந்தார்.

இதன் போது ஆப்கானிஸ்தான் அணி வீரர் முகமது நபி தொடர்ச்சியாக துனித் வெல்லாலகேவிற்கு ஐந்து சிக்ஸர்களை அடித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியின் இடை நடுவில் துனித் வெல்லாலகேவின் தந்தை மாரடைப்பினால் உயிரிழந்துள்ளார்.

எனினும் இந்த விடயம் வெல்லாலகேவிடம் அறிவிக்கப்படவில்லை எனவும், போட்டி நிறைவடைந்ததன் பின்னரே அவரிடம் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முதலில் தந்தைக்கு மருத்துவ அவசர நிலை ஏற்பட்டதாகக் கூறப்பட்டதாகவும் பின்னர் தந்தை இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பரிசளிப்பு நிகழ்வு நடைபெறுவதற்கு முன்னதாக இந்த விடயம் அறிவிக்கப்பட்டதாகவும் அணிவீரர்களும் தலைமை பயிற்றுவிப்பாளர் சனத் ஜயசூரிய உள்ளிட்டவர்களும் பெரும் சோகத்தில் ஆழ்ந்திருந்ததாகவும் இளம் வீரர் துனித் வெல்லாலகேவை ஆற்றுப்படுத்துவதில் அணி வீரர்கள் பெரும் சிரத்தை எடுத்துக் கொண்டதனை காணொளிகளில் காண முடிந்தது.

இதேவேளை, இறுதி ஓவரில் வெல்லாலகேவிற்கு ஐந்து சிக்ஸர்களை விளாசிய முகமது நபிக்கும் இந்த மரணச் சம்பவம் குறித்து அறிவிக்கப்பட்டது. அந்தச் சம்பவம் தொடர்பில் அவர் அதிர்ச்சி அடையும் காட்சிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த மரணச் செய்தியை கேள்வியுற்ற நபி தனது எக்ஸ் தளத்தில் துனித் வெல்லாலகே மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்து பதிவிட்டுள்ளார். இந்த நெருக்கடியான தருணத்தில் வலுவாக இருங்கள் சகோதரரே என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஏழாலை மயிலங்காட்டில்

# ஆலயத்தில் மயங்கி வீழ்ந்த 29 வயதான அர்ச்சகர் பலி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மயிலங்காடு ஞான வைரவர் ஆலயத்தில் மயங்கி விழுந்த அர்ச்சகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த எம். ஏ. பட்டதாரியான பிரபாகரன் சாருஜன் (வயது- 29) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி பூசகர் இருமல், சளி காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை (16) மானிப்பாயில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். பின்னர் மறுநாள் சளிக்கு ஆவியும் பிடித்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை (19) ஆலயத்துக்கு பூசைக்குச் சென்ற நிலையில் அர்த்தமண்டபத்தில் மயங்கி விழுந்துள்ளார்.

உடனடியாகத் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் நுரையீரலில் இரத்த அடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
## பகுதி VI

05

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இதன்படி 1861 இல் இலங்கை அரசாங்கம் இவ்வீதியை அமைக்கும் பொறுப்பினை முழுமையாகக் கையேற்கலாயிற்று.

1862 ஆம் ஆண்டு இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக, இலண்டனில் ஒப்பந்தக்காரருக்குக் கோரிக்கைகள் பிரசுரிக்கப்பட்ட பொழுது, பவியல் (Faviell) என்பவர் இப்பாதையை £ 873, 039 செலவில் கட்டி முடிப்பதாகச் சமர்ப்பித்த திட்டத்தை, 1863 இல் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

1864 ஜனவரியில் முதலாவது புகையிரதம் இலங்கையில் இறக்கப்பட்டு, பாதையை அமைக்கும் வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டது. இதன் பின்பு வேலை வெகுகெதியில் முன்னேறியது.

1864 இன் முடிவில் வீதி, அம்பேபுஸ்ஸ வரை முற்றுப் பெற்றது. 1865 ஒக்டோபர் 2 ஆம் நாள், கொழும்பு -அம்பேபுஸ்ஸ வீதி போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது.

1867 ஏப்ரல் 30 ஆம் நாள், கொழும்பிலிருந்து புறப்பட்ட முதல் புகையிரதம் 44 மணித்தியாலங்களில் கண்டியை வந்தடைந்தது. இவ்விதமாகப் பல்லாண்டுகளாக எடுக்கப் பட்ட முயற்சி வெற்றியில் முடிந்தது.

கம்பளை, நாவலப்பிட்டிப் பகுதி கோப்பித் தோட்டங்களின் மத்திய தானமாக விளங்கியதனால், அரசாங்கம் அப்பிரதேசத்தின் தேவைகளை ஈடுசெய்யும் நோக்கமாக பேராதெனியாவிலிருந்து ஒரு கிளைப்பாதையை கம்பளைக்கு 1873 இலும் நாவலப்பிட்டிக்கு 1874 இலும் திறந்தது.

அரசாங்கம் கோப்பித் தோட்ட முதலாளிகளின் தேவைகளுக்கு மாத்திரமே புகையிரத வீதிகள் அமைக்கப்பட வேண்டுமெனக் கருத்திற் கொள்ளவில்லை, அது தாழ்பிரதேச மக்களின் நன்மைக்காக ஒரு கரையோரப் பாதையை அமைக்கத் திட்டமிட்டது.

இப்பாதை மொறட்டுவையை 1877 இல் அடைந்தது. 1879 இல் கழுத்துறை வரை நீட்டப் பெற்றது.

இதற்கிடையில் திம்புள, டிக்கோயா, மஸ்கெலியா, பொகவந்தலாவை, ஊவா எனும் பகுதிகள் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களாக மாறின. விசேடமாக வெகுவிரைவில் விருத்தியடைந்து வந்த ஊவாப் பிரதேசம், போக்குவரத்து வசதிகளின்றி மிகவும் கஷ்டப்பட்டது. கோப்பி முதலாளிகளின் வற்புறுத்தலுக்கு இயைந்து புதுப் பாதையை டிக்கோயா, திம்புள, நானுஓயா என்பவற்றுக் கூடாக அமைக்கத்திட்டம் வகுக்கப்பட்டது

மாத்தளைப் பிரதேச முதலாளிகளும் கண்டியிலிருந்து மாத்தளை வரை ஒரு பாதை திறக்கப்பட வேண்டு மென வாதாடி வெற்றி பெற்றனர். மாத்தளை வீதி 1880 இலும், நாவலப்பிட்டி நானுஓயா வீதி 1885 இலும் முற் றுப் பெற்றன.

நானுஓயாவிலிருந்து ஆரம்பித்த பாதை, 1894 இல் பண்டாரவளையையும், 1924 இல் பதுளையையும் அடைந்தது.

பொல்காவலை-குருநாகல் புகையிரத வீதி 1894 இல் முடி வெய்தியது. கரையோரப் பாதை, படிப்படியாக நீட்டப்பட்டு 1895 இல் மாத்தறை வரை விரிந்தது.

தோட்ட முதலாளிகளின் வற்புறுத்தலின் பேரில், களனிப் பள்ளத்தாக்குப் பாதையில் வேலை 1896 இல் ஆரம்பமாயிற்று. 5' 6" அகலத்தில் இலங்கையெங்கும் அமைக்கப்பட்ட இருப்புப் பாதையில் மாற்றம் செய்யப்பட்டது. களனிப் பாதையை 2' 6" அகலமான பாதையாக அமைக்கத் திட்டமிடப்பட்டது. இரத்தினபுரி வரை அமைக்கப்பட்ட பாதை 1912 இல் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் புகையிரத வீதிகளை அமைப்பதில் அரசாங்கம் புது உற்சாகம் காட்டியது. குருநாகலிருந்து வடக்கு நோக்கி ஆரம்பித்த பாதை, 1905 இல் காங்கேசன்துறை வரையும், 1914 இல் தலைமன்னார் வரையும் முறையே விஸ்தரிக்கப்பட்டது.

களனிப் பள்ளத்தாக்குப் பாதை 1902 இல் அவிசாவளை வரையும், பின்னர் இரத்தினபுரி, ஒப்பநாயக்க வரை நீட்டப்பட்டது.

நீர்கொழும்புப் பாதை 1909 இல் ஆரம்பமாயிற்று. இது 1919 இல் சிலாபம் வரையும் 1924 இல் புத்தளம் வரையும் நீண்டது.

திருகோணமலைக் கிளை 1927 இலும், மட்டக்களப்புக் கிளை 1928 இலும் முறையே முற்றுப் பெற்றன. இவ்விதமாக கொழும்பு-கண்டி வீதியுடன் ஆரம்பித்த இலங்கைப் புகையிரத சேவை 1928 இல் 894 மைல்களாக அதிகரித்தது.

### தபால், தந்தித் தொடர்புச் சேவைகள்

தெருக்களும் புகையிரத வீதிகளும் அமைவு பெற்றதன் பயனாக தபால், தந்தி, போக்குவரத்துச் சேவைகளிலும் துரிதமான முன்னேற்றம் காணப்பட்டது. 1840 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதன் முதலாக "பென்னி தபால்" முறை அமுலுக்கு வந்தது.

அங்கு இதற்கு முன் தபால் கொண்டு செல்லப்படும் தூரங்களுக்குத் தக்கதாக கட்டணம் இருந்தது. உதாரணமாக பிரித்தனிலிருந்து 50 மைல் தூரத்தில் இலண்டனுக்கு ஒரு தபால் தாளை அனுப்புவதற்குச் செலவு 8 பென்ஸாக இருந்தது. றோலன்ட் ஹில் (Roland Hill) என்பவர், இம்முறைக்குப் பதிலாக நாடு அடங்கிலும் பென்னித் தபால் முறையினைச் சிபாரிசு செய்தார். அவருடைய அபிப்பிராயம், நிறைந்த ஆதரவைப் பெறவே, அம்முறை 1840 இல் இங்கிலாந்தில் ஏற்பட்டது. அதேமுறை இலங்கையில் 1858 இல் நடைமுறைக்கு வந்தது.

குறிப்பு - ரோலண்ட் ஹில், சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். 1837 ஆம் ஆண்டு, தனது 42 ஆவது வயதில் "தபால் அலுவலகச் சீர்திருத்தம்: இதன் முக்கியத்துவமும் நடைமுறைச் சாத்தியமும்" ("Post Office Reform: its Importance and Practicability") என்ற அவரது பிரபலமான பிரசுரத்தை வெளியிட்டார். இப் பிரசுரத்தில் அவர் அதிகாரப்பூர்வ, முன்னரே அச்சடிக்கப்பட்ட கடித உறைகளையும், ஒட்டத்தக்க தபால் தலைகளையும் வெளியிடவேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டினார்.

பிரித்தானியத் தீவுகளுக்குள் எந்த இடத்துக்கும் அரை அவுன்ஸ் நிறையுள்ள தபாலை அனுப்புவதற்குக் குறைந்த சீரான கட்டணமான ஒரு பென்னியை அறவிட வேண்டுமெனவும் அவர் ஆலோசனை வழங்கினார்.

இதற்கு முன்னர் தபால் விநியோகம் செய்யப்பட வேண்டிய தூரத்தையும், கடிதத்தின் தாள்களின் எண்ணிக்கைக்கும் ஏற்பவே கட்டணம் அறவிடப்பட்டது. ரோலண்ட் ஹில்லின் ஆலோசனைப் படி, ஒரு பென்னி கட்டணம், குறிப்பிட்ட நிறைக்கு உட்பட்ட கடித மொன்றை நாட்டின் எந்த மூலைக்கும் அனுப்ப முடிந்தது.

குறைந்த கட்டணம், எழுத வாசிக்கத் தெரிந்த கூடுதலானவர்கள் தபால் சேவையைப் பயன்படுத்த வழி செய்தது. 1840 மே 6ஆம் திகதி முதலாவது தபால் தலை வெளியிடப்படுவதற்கு முன்னரே, அதே ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி, முன் கட்டணம் செலுத்தப்படக்கூடிய கடித உறையுடன், சீரான பென்னி தபால் சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

முதல் தந்திக் கம்பனி, இங்கிலாந்தில் 1847 இல் செயற்பட ஆரம்பித்தது. 1858 இல் முதன் முதலாகக் கொழும்பும் காலியும் தந்திக் கம்பிச் சேவையினால் இணைக்கப்பட்டன. அதேயாண்டு இவ்வசதி கண்டிக்கும் மன்னாருக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

1859 இல் மன்னாரிலிருந்து இந்தியாவுக்குத் தந்தி இணைப்பு ஏற்பட்டது. அதற்குப் பின் இந்தியாவினின்று இங்கிலாந்துக்குத் தொடர்பு, தரை வழியாக ஏற்பட்டது.

-

1870 இல் தந்திக் கம்பிகளை கடலின் கீழ் இடும்வேலை ஆரம்பிக்கப்பட்டது. நீண்ட தூரங்களுக்குத் தபாலைக் கொண்டு செல்வதற்குப் புகையிரத வீதிகள் பயன்படுத்தப்பட்டன. தபால் கொண்டு செல்வதற்கான பிரத்தியேக வண்டிகள் புகையிரதங்களுடன் இணைக்கப்பட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்திலிருந்து...

பேருந்திலிருந்து தவறிவீழ்ந்த இளைஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த சுகிர்தன் (வயது-26) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் ஆடைத்தொழிற்சாலையில் பணியை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை பேருந்திலிருந்து தவறிவிழுந்து படுகாயமடைந்தார்.

உடனடியாகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய பேருந்துச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,316)

## வவுனியாவில்...

பெற்ற விபத்தில் ஜேர்மன் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா கனகராயன்குளம் ஏ9 வீதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்.நோக்கிப் பயணித்த கனரக வாகனம் வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது அதே திசையில் பயணித்த துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த ஜேர்மன் நாட்டுப் பிரஜை படுகாயமடைந்த நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவர் ஜேர்மன் நாட்டில் இருந்து வருகை தந்து கனகராயன்குளம் பகுதியில் தங்கியிருந்த நிலையில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய கனரக வாகனத்தின் சாரதி கனகராயன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், விபத்துத் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,250)

## உள்ளகப் பொறி...

தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பது நாம் வழங்கிய உறுதிமொழிகளில் ஒன்றாகும். எனவே அது தொடர்பில் எமக்குப் பாரிய பொறுப்பு இருக்கின்றது.

இந்நாட்டில் நல்லிணக்கமென்பது மிக முக்கியம். தமது உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்கின்றது என அனைத்து இன மக்களும் உணரும் நிலை ஏற்பட வேண்டும். இதற்காக நீதித்துறையின் சுயாதீனம் குறித்து நம்பிக்கை ஏற்பட வேண்டும்" எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மேலும் எந்தவொரு விசாரணைகளிலும் அரசியல் ரீதியில் அரசாங்கம் தட்டிக்கழிப்பதில்லை. அதனால்தான் கடந்த காலங்களில் மறைக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில்கூட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு என்ன செய்யலாம். நல்லிணக்கப் பக்கத்தில் எவ்வாறு தலையீடுகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி நீதி அமைச்சு கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது. இவற்றுடன் தொடர்புடைய அலுவலகங்களை வலுப்படுத்துவது பற்றி அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நாம் இனவாதத்தைத் தூண்டுவதில்லை. இனவாத அரசியலை நிராகரிக்கின்றோம். இனவாத நோக்கில் முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. அதனால்தான் அனைத்து இன மக்களும் இந்த அரசாங்கம் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்" எனப் பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## ஒருங்கிணைப்பு...

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைப் புறக்கணித்து வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வேலணைப் பிரதேச சபையின் உறுப்பினர்கள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தியைப் பிரதேச வளாகத்துக்குள் உள்நுழைய விடாது தடுத்துப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட குறித்த எதிர்ப்புப் போராட்டத்தால் இணைத்தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதம் முற்றியதால் பிரதேச செயலக சூழலில் பெரும் பரபரப்பான நிலை ஏற்பட்டது. குறித்த போராட்டத்தின்போது வேலணைப் பிரதேச மக்கள் பிரதிநிதிகளான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இருவரைத் தவிர ஏனையவர்கள் அனுமதிக்கப்படாது தடுக்கப்பட்டனர்.

தொடர்ந்து வாக்குவாதம் இடம்பெற்ற நிலையில்,

உறுப்பினர்களின் கோரிக்கைக்கும் இணக்கம் தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதேச இணைத்தலைவர், கூட்டத்திற்கு உறுப்பினர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு அழைப்பு விடுத்தார். இதன்படி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை 10.15 மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி தலைமையில் ஆரம்பமானது.

கூட்டம் ஆரம்பமான நிலையில் கூட்டத்தில் முக்கியஸ்தர்களுக்கான ஆசன ஒழுங்குபடுத்தலில் தவிசாளருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத நிலையில் மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டது.

தொடர்ச்சியாக வாக்குவாதங்கள் நடைபெற்ற நிலையில் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஆசனங்கள் வழங்கப்பட்டு கூட்டம் தொடர்ச்சியாக நடைபெற்றது. (ம-7,104)

## தியாக...

தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களால் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் திலீபனின் நினைவு உருவப்படம் திருகோணமலை சிவன் கோவிலடியில் நிறுவப்பட்டுத் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மாலை 5.15 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை திருகோணமலை பிரதான பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகளால் குறித்த உருவப்படம் முறையற்ற விதத்தில் அகற்றப்பட்டுள்ளது.

அநுர அரசாங்கம் திலீபனின் நினைவேந்தலுக்கு அனுமதித்துள்ள நிலையில் பொலிஸாரின் இச்செயற்பாடு தொடர்பில் பலர் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2025.09.19
சீட்டிழுப்பு இலக்கம் 5957
T 6 4 6 4 5 7
அத சம்பத
T 6 4 5 7
சீட்டிழுப்பு இலக்கம் 0532
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.19
சீட்டிழுப்பு இலக்கம் 0073
மேடம் 13 14 38 44
தொலைபேசி 0112-470662, 0114-607000
இணையம் www.nlb.lk

தன நிதானய
திகதி - 2025.09.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1987
V 32 39 54 59 V
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Double Chance
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

மெகா பவர்
திகதி 19/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2305
U 23 13 14 37 80
தொலைபேசி 0112-470662, 0114-607000
இணையம் www.nlb.lk

NLB ஜய
திகதி 2025.09.19
சீட்டிழுப்பு இலக்கம் 0225
E 6 0 3 5
தேசிய லொத்தர் சபை
தொலைபேசி 0112-470662, 0114-607000
இணையம் www.nlb.lk

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4199
சீட்டிழுப்பு திகதி | 19.09.2025
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 11 21 36 60
J
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.19
சீட்டிழுப்பு இலக்கம் 1266
கன்னி 18 22 32 36 கன்னி
தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.09.2025
வெற்றி வாரம் 0665
வர்ணம்
ஆங்கில எழுத்து B
2 6 9 1 7 1
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.24.593.882.80
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2931
வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2025.09.19
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
04 23 61 76 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.60,944,605.60
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா
திகதி 19.09.2025 வெற்றி வாரம் 5092 வர்ணம்
வெற்றி இலக்கங்கள்
03 05 36 60 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,470,668.40
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 0773
சீட்டிழுப்பு திகதி 19.09.2025
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
34 | 42 | 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4643
வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 19.09.2025
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
11 19 29 36
விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.9,179,313.20
அபிவிருத்தி லொத்தர் சபை

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 12 39 43 68 73
சுப்பர் இலக்கம்
2107
19.09.2025
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.594,956,569.60
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2757
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2025.09.19
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.52.449.315.20
வெற்றி இலக்கங்கள்
01 38 43 48 W
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள்
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் 07 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- நல்லூர் குறுக்கு வீதி முகப்புடன் யாழ். மாநகர சபை முன் வீதி
- நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தூரம்
- பருத்தித்துறை வீதி 150m, செட்டித்தெரு 50m
- நாவலர் வீதி 150m, கச்சேரி நல்லூர் வீதி 100m
- இரண்டு பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 3 கோடி (மூன்று கோடி)
- நல்ல சுற்றுச்சூழல்
- அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளன.

(5446)

தொடர்புகளுக்கு :

**077 468 3354, 077 288 0152**

**076 860 2770**

**Golden Real Estate (Pvt) Ltd**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் றெஜினிங் கொலிஜ்க்கு முன்பாக 14 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

பிரதான போக்குவரத்துச் சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக

(5454)

தொடர்புகளுக்கு : விமல்

**076 755 8606, 077 638 5683**

## விற்பனையாளர் தேவை

கல்வியங்காடு மற்றும் திருநெல்வேலிப் பகுதியில் லொத்தர் சீட்டு விற்பனைக்கு ஆட்கள் தேவை.

**077 078 2395**
**077 131 2534**

(5463)

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் Printers ஒன்றிற்கு Graphic designer, Type setting செய்வதற்கு வேலையாள் தேவை.

Rs 30,000 – 50,000 வரை சம்பளம் வழங்கப்படும். தொழில் தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**076 192 3444**
**077 482 1912**

(1565)

## மணப்பெண் தேவை

01)இணுவில், 1994, இந்து, திருவோணம், Bachelor of civil Engineering, civil engineer, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(54449)

02)மாதகல், 1992, இந்து, அஸ்வினி, B.com, Team Lead, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(54465)

03)வேலணை, 1987, இந்து, ஆயிலியம், IT Engineering, UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(53916)

04)கரவெட்டி, 1993, இந்து, பூரட்டாதி, Civil Engneering (Moratuwa), Ms (reading), Engineer, Singapore citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(53352)

05)நெல்லியடி, 1991, இந்து, பூராடம், HND Completed (Jaffna University), US citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(47452)

06) புலோலி, 1993, இந்து, புனர்பூசம், Bachelor of Computer Science, Software Engineer, Sweden citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(36387)

07)நீர்வேலி, 1991, இந்து, பூரட்டாதி, Bsc Biology, IT work as programer, US citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(32143)

08)ஒட்டுமடம், 1985, இந்து, ரேவதி, Computer Engineering, Manager, Germany citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(31625)

09)இணுவில், 1986, இந்து, ரோகிணி, Bachelor Studied IT and Accountant, Norway citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(31506)

10)உரும்பிராய், 1993, இந்து, மகம், Maintenance of civil and Industrial system, Italy citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(29117)

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(5465)

**S.Sharma J.P** | www.thaalee.com | 077 539 3728

## வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணம் கீரிமலையில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டில் பூந்தோட்டப் பராமரிப்பும் வீடு மேற்பார்வைக்கும் ஆள் தேவை

3 நேர உணவும் தகுந்த சம்பளமும் தங்குமிட வசதியும் தரப்படும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 873 9479**

(5449)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3921)

**V2 TRAVELS** v2vacancies@gmail.com **076 1410725 076 8226236**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் k.k.s வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5329)

**076 663 3199**

## வேலையாட்கள் தேவை

தளபாடக் கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்.

இடம் : கோண்டாவில் யாழ்ப்பாணம்.

**077 713 0872**

(5460)

## காணி வீடு விற்பனை கொள்வனவு

யாழ்ப்பாணம், தீவகம், மண்டைதீவு, நயினாதீவு, கொழும்பு மற்றும் பலாலி, A9, K.K.S, பருத்தித்துறை வீதிகளிற்கு அருகில் வீடு, காணி விற்கவுள்ள உரிமையாளர்கள் மற்றும் வாங்கவுள்ளவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

(1563)

**076 311 9485**

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் ஆயாக்கடவை பிள்ளையார் கோவிலிலிருந்து 500 மீற்றர் தூரத்தில், நல்ல செம்மண் வளமுள்ள காணி 2 பரப்பாகவும், 4 பரப்பாகவும் விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் ஏற்றது.

(5447)

**077 129 8159**

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சோமசுந்தரம் விக்னேஸ்வரன்**

திதி : சதுர்த்தசி

வையகம் போற்ற வாழ்ந்து வாழுறையும்
தெய்வமதாய் பழுதில்லாப் புதுமலராய் என்றும்
இதயங்களில் மணம் வீசும் அன்பு அப்பாவே
ஆண்டுகள் தான் பதின்மூன்றாய் ஆனதுவோ
உயர்குணமேவிய திருவுருவாய் எமையெல்லாம்
வழிகாட்டி நிலவொளியாய் குளிர்மை தந்து
தினம் எமையெல்லாம் மனதாற்றி அகவொளியாய்
குறைநிறைகள் எடுத்தியம்பி நல்வழிகாட்டிய
உம் கருணையினைப் பேறாய் பெற்றோம்.
பெருமைகொண்டோம். நீறாகிப் போனாலும்
நீங்களே திசைகாட்டி நித்தியவாழ்வுதனில்
இயற்கையின் உம் உணர்வுகளை
நுகர்ந்து உம் பாதம் மலர்தூவி வணங்குகின்றோம்.

தோற்றம் 31.10.1955 | மறைவு 14.10.2012

(1564)

படித்த மகளீர் திட்டம், மிருசுவில்.

உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 172/= | |
| 5Kg Prima கோதுமை மா | - 950/= | ~~1150/=~~ |
| 1Kg சிவப்பு பருப்பு | - 235/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 310/= | Max 3Kg |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 188/= | |
| 1Kg அவல் | - 310/= | |
| 1Kg கடலை | - 375/= | |
| 1Kg சர்க்கரை | - 255/= | |
| 1Kg கடலைப்பருப்பு | - 320/= | |
| 100g கற்கண்டு | - 35/= | |
| 100g கச்சான் முத்து | - 110/= | |
| 01 மங்களம் ஊதுபத்தி | - 135/= | ~~150/=~~ |
| 01 பெட்டி கற்பூரம் | - 280/= | ~~370/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 140/= | ~~240/=~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

(1566)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org